1479

stered No. M.　　　　தனிப்பிரதி அணா 2.

வருஷ சந்தா ரூ ௧ ௮ 0 வெளிநாடுகளுக்கு ரூ ௨ 0 0

உதயபாரதி

UDAYA BHARATI.

சோமாதேவியிலிருந்து தமிழ் மாதந்தோறும் வெளிவரும்
ஓர் தேசீயத் தமிழ்ப் பத்திரிகை.

1926-ம் ௵ அக்டோபர் ௴

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 JUN 1927
MADRAS

மலர் ௧.　　அக்ஷய-௵ ஐப்பசி௴　　இதழ் ௧.

உள்ளடக்கம்.

விஷயம்.　　　　பக்கம்.

௧. கீதாஞ்சலி ... ... ௧.
௨. பாரதி தரிசனம். ... ... ௨.
௩. நமது பத்திரிகை. ... ... ௩.
௪. உதய காலம். ... ... ௪.
௫. ஒழிவு நேரம். ... ... ௮.
௬. மகாத்மா காந்தியின் மணிமொழிகள். ... ௧௩.
௭. விநோதக் குறிப்புகள். ... ... ௧௫.
௮. செஞ்சொற் சதங்கை. ... ... ௧௬.
௯. மனுஷ்ய தர்மம். ... ... ௨௧.
௧0. மக்கள் வாழ்க்கையின் மூலம். ... ... ௨௫.
௧௧. லேயோனிதனின் சரிதை. ... ... ௨௬.
௧௨. குறிப்புகள். ... ... ௩௬.

ப. ராமஸ்வாமி அய்யங்கார்.
பத்திராதிபர்.

"உதயபாரதி"

சந்தா விபரம்.

இந்தியா, சிலோன், பர்மா, முதலிய உள் நாட்டிற்கு ௵ ௧-க்கு	ரூ ௧—௮—0
பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளி நாட்டிற்கு ௵ ௧-க்கு	ரூ ௨—0—0

தனிப் பிரதி விலை அணா இரண்டு.

வேண்டுகோள்.

உதயபாரதி கல்வி, சமூகம், பொருளாதாரம் அரசியல் முதலிய வழிகளில் தமிழர் முன்னேற்றம் அடைவதை நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

இலக்கிய ஆராய்ச்சி, உயர்ந்த நீதிகளைப் புகட்டும் இனிய சிறுகதைகள், சுகாதார வியவசாயக் குறிப்புகள் முதலிய பெரும் விஷயங்களுடன் உதயபாரதி ஒவ்வொரு தமிழ் மாதத்திய முதல் வாரத்திலும் வெளிவரும். தமிழ் மக்கள் அனைவரும் சந்தாதாரராகச் சேர்ந்து உதயபாரதியை ஆதரிப்பார்களாக.

சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு.

௧. எந்த மாதம் சேரினும் ஐப்பிசியீ முதற்கொண்டே கணக்கு சேர்க்கப்படும்.

௨. எப்பொழுதும் சந்தாவை முன்பணமாகவே செலுத்த வேண்டும். ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

௩. சந்தா தொகையை மணியார்டர் செய்தால் ௨-அணாத் தான் செலவாகும். வி. பி. யில் பத்திரிகையைப் பெறுவதில் ௩-அணா அதிகச் செலவாகும். மணியார்டர் செய்தால் எமக்கு அனுகூலமும், நண்பர்களுக்குத் தனலாபமும் எற்படும்.

[வியாபாரிகள் சாமான்களைக் கடையிலே வைத்துக்கொண்டிருந்தால் பயனில்லை. விளம்பரஞ் செய்யவேண்டும். விளம்பரத்திற்குச் சிறந்த சஞ்சிகை உதயபாரதியே யாகும். உடனே விளம்பர விகிதத்திற்கு எழுதுக.]

கார்யஸ்தன், உதயபாரதி கார்யாலயம்,
சோமாதேவி.

ஓம்
வந்தேமாதரம்.

உதயபாரதி.
UDAYA BHARATI.

ஓர் இனிய தமிழ் மாதப்பத்திரிகை.

மலர் ௧.	1926-௵ அக்டோபர்-௴ அக்ஷய-௵ ஐப்பசி-௴	இதழ் ௧.

கீதாஞ்சலி.

தேடிய அகலிகை சாபந்தீர்த்ததாள்
நீடிய நெறிபல கடந்து நீண்டதாள்
ஓடிய சகடிற உதைத்துப் பாம்பின்மேல்
ஆடியும் சிவந்ததாள் என்னையாண்டதாள்.
(வில்லிபுத்தூரார்.)

புலையாம்பிறவி பிறந்தென்செய்தோம் பொன்னிபொன்கொழிக்கு
மலையார் திருவரங்கத் தெம்பிரா னமதன்னை யொடுந்
தொலையாத கானங் கடந்த வந்நாள் தடந்தோறும் புல்லாய்ச்
சிலையாய்க் கிடந்திலமே நெஞ்சமே கழல் தீண்டுகைக்கே.
(பிள்ளைப்பெருமாளையங்கார்.)

* * *

அக்குலாமரையினர் திரைகுலாமுடியின ரடிகளன்று
தக்கனார் வேள்வியைச் சாடிய சதுரனார் கதிர்கொள் செம்மை
புக்கதோர் புரிவினர் வரிதருவண்டு பண்முரலுஞ்சோலைத்
திக்கெலாம் புகழ்வுறுந் திருநெல்வேலியுறை செல்வர்தாமே.

வம்பார்குன்ற நீடுயர் சாரல் வளர் வேங்கைக்
கொம்பார் சோலைக் கோல வண்டியாழ் செய்குற்றால
மம்பா னெய்யோடா டலமர்ந்தானலர் கொன்றை
நம்பான் மேய நன்னகர் போலு நமரங்காள்.
(திருஞானசம்பந்தர்.)

பாரதி தரிசனம்.

(வாணிதாஸன் எழுதியது.)

இமயமுதற் குமரிவரை விளங்குமுன்றன்
எழில் முடியும் திருவடியுங் கண்டேன் கண்டேன்.
அமையும் இகற் கைச்சூலம் தருமநேமி
அருள் விழியும் வடிவழகும் கண்டேன் கண்டேன்.
இமையவரும் உன் சீர்த்தி பெருக்க விங்கே
எடுக்கு மவதாரத்தைக் கண்டேன் கண்டேன்.
சமைய முனதிளங் குமரர் உண்மைப் போரில்
ஜயமாலை சூடிவரக் கண்டேன் நானே.

நினைப்பரிய அஞ்சு திரு விரதத்தாளை
நெடுவரையைப் பேரரணாய் நேர்வித்தாளைக்
கனைப்புறும் ஆழ்கடலகழித் திறத்தினாளைக்
கணக்கில் சீர்த்தேவர் தொகைப் படையினாளை
எனைப் பெருநற்கருணையினா லாட்கொண்டாளை
ஏதிலார் புறங்காட்டத் திகிரியேந்திச்
சினப்படு போர்க்களத்து ஜயபேரியார்க்குட்
செல்வியைக் கண்ணாரச் சேவித்தேனே.

ஓராத சிந்தையருக் குணர்வாகாளை
உன்னுவாருள மணியை வரதத்தாயை
நேராத குணத்தவரை வஞ்சித்தாரை
நெஞ்சழலால் நீறுபடச் செய்குவாளைப்
போதாரம் சுரக்கும் புனித ஊற்றைப்
பேசரிய நலத்தாளைச் சங்கை கொண்டார்
பாராத கண்மணியைப் படிகத்தாளைப்
பார்த்தது நான் இசைமல்கு பரதத்துள்ளே.

நமது பத்திரிகை.

எந்த நாட்டில் பத்திரிகைகளும் புஸ்தகங்களும் தேச பாஷையில் மிகுதியாகத்தோன்றி உலவுகின்றனவோ அந்நாடு அறிவிலும் கல்வியிலும் பெருக்கமுடையதாகக் கருதப்படுகின்றது. மேல்நாடுகளில் நாளுக்குநாள் பத்திரிகைகளும் புஸ்தகங்களும் தோன்றி மக்களின் அறிவையும் செல்வத்தையும் விருத்தியடையச் செய்கின்றன. அமெரிக்கா தேசத்தில் கிராமங்களிலிருந்து கூடப் பலபத்திரிகைகள் பிரசுரிக்கப்பட்டுப் பயன்படுகின்றன. கிராமப்பள்ளிக்கூட ஆசிரியர்களே விஷயங்களைச் சேகரித்து அச்சிட்டு இப்பத்திரிகைகளை வெளியிடுகின்றனர். வெவ்வேறு வகைப்பட்ட மனிதர்களும் தங்கள் சக்திக்கும் கிடைக்கக்கூடிய ஒழிவு நேரத்திற்கும் தகுந்ததாயுள்ள பத்திரிகையை வாங்கிப்படிப்பதற்குப் போதிய சௌகரியங்களிருக்கின்றன.

நம் நாட்டிலும் தற்சமயம் பல பத்திரிகைகள் தோன்றிவருவது நம்மவர் அறிவுவளர்ச்சியிலும் தேசநன்மையிலும் கொண்டுள்ள மனப்பான்மையையும் அபிவிருத்தியையும் குறிக்கின்றது. தமிழ்நாட்டில் தோன்றி வெகுகாலமாய்ப் பொதுநன்மைக்கு உழைத்துவரும் பத்திரிகைகளுக்கு நடுவே நாமும் உதய பாரதியை வெளிப்படுத்தியுள்ளோம். மயக்கமும் சோம்பலும் நீங்கிப் பலவழிகளிலும் முன்னேறிச்செல்ல எழுந்துநிற்கும் பாரதத் தாயின் செவ்விய பெயரை இப்பத்திரிகைக்கு வைத்துள்ளோம். அன்னையின் பெயர் நம்மவர் கடமையை உணரச்செய்து நல்வழி காட்டும் என்பதே எமது எண்ணம்.

இப்பத்திரிகையில் பல அறிஞரால் புதிய எளியமுறையில் எழுதப்பட்ட வியாசங்களும், இனிய சிறுகதைகளும் மிகுந்த பயன்விளைக்கக்கூடிய மொழிபெயர்ப்புகளும் வெளிவரும். இன்னும் பொருளாதாரம், அரசியல், சுகாதாரம், விவசாயம் முதலிய பெரும் விஷயங்களைப்பற்றியும் அவைகளின் அபிவிருத்திக்குரிய முறைகளைப்பற்றியும் பலவிஷயங்கள் வெளிவரும்.

தமிழ் பாஷாபிவிருத்திக்கும் தேசியவாழ்வின் முன்னேற்றத்திற்கும் பாடுபட்டுவரும் உழைப்பாளர் கூட்டத்தில், உதய பாரதி

யும் முன்னணியில் நின்று வேலைசெய்துவரும். உலகில் புகழுடன் தோன்றி மக்களுக்கு நல்வழிகாட்டிய பெரியோர், வீரர் கலைஞர் முதலியவர்களுடைய சரித்திரங்களைப்பற்றியும் பலவேறு சரித்திர சம்பவங்களைப்பற்றியும் மாதந்தோறும் பல வியாசங்கள் வெளியிடவேண்டுமென்பது எமது கோரிக்கை.

வியாசங்களும், கதைகளும் மற்றும் விமரிசனங்களும் விநோதக்குறிப்புகளும், எல்லாம் எளிய நடையில் எழுதப்பெற்று எல்லோருக்கும் பொருள் விளங்கும்படி யிருக்கும்.

தமிழ்நாட்டின் முன்னேற்றத்தையும் தமிழின் அபிவிருத்தியையும் கருதும் அன்பர்கள் அனைவரும் எமது பத்திரிகையையும் முயற்சியையும் ஆதரிப்பார்களாக.

உதய காலம்.

(காசி. ஸ்ரீமான். பா. ஆதிமூர்த்தி எழுதியது.)

உதயகாலம் வராத இரவேயில்லை. உதயகாலம் கேவலம் இரவிற்கு மட்டுமல்ல. ஒவ்வொரு அணுப்பிரமாண நிலைக்கும், ஒவ்வொரு வினைக்கும் ஒவ்வொரு வினைமுடிவிற்கும் உதயகாலம் இன்றியமையாததாகும்.

விடியல் அல்லது உதயகாலத்தைத் தடுக்க எப்பலத்தாலும் எப்படையாலும் எச்சேனையாலும் முடியாது. அது சகல எதிர்ப்புகளையும் தகர்த்துப் பொடியாக்கிக்கொண்டுவரும் வன்மையுடையது. உதயகாலத்தின் ஆற்றலுக்குப் பேரரசர்களும், பெரும் வன்மைகளும் இரையாய்விடும் என்பது நிச்சயம்.

நம்பிக்கையுள்ள ஒவ்வொரு தனிமனிதனும், சமூகமும், ஜாதியும், நாடும், உதயகாலத்தைநோக்கியே போய்க்கொண்டிருக்கிறான், போய்க்கொண்டிருக்கின்றன. இதைத் தடுக்கும் வன்மையும், அதிகாரமும் சிறைக்கூடமுமில்லை- எத்தடைக்கும் உதயம் சத்துருவாகமுடியும் என்ற உண்மையை நாம் தினசரி பார்த்துவருகிறோம்.

ஹா! தடுக்கமுடியவில்லையே, என்ன செய்வோம் என்று மார்பில் மலர்ந்தகையை வைத்துத் தயங்கிநிற்கும் பெரும் போர்த்தலைவனையும் அரசனையும் நாம் பார்க்கிறோம்; இனியும் பார்க்கப்போகின்றோம்.

நூற்றிருபது ஆண்டுகளாக ஜர்மனி, ஆஸ்திரியா, ருஷியா ஆகிய அரக்க ஆட்சிகளால் கவரப்பட்டு, பங்கீடு செய்யப்பட்டு அடிமையாக்கி நசுக்கப்பட்டிருந்த "போலண்டு" நாட்டிற்கு எதிர்பார்க்காத விதமாக உதயகாலம் உண்டானதை நாம் பார்க்கவில்லையா? இராவண அதிகாரத்திலும் கொடியதான கொடுங்கோலால் அடக்கப்பட்டுருந்த ருஷிய எகாதிபத்தியம் உதயகால வல்லமையால் தவிடுபொடியாக்கப்பட்டு இராமராஜ்யமாகிப் பல்கிவருவதை நாம் பார்க்கிறோமன்றோ? விவேகிகள் நன்கு அறிந்த வெள்ளிடைமலைபோன்ற இவ்விஷயத்தில் வேறுபல உதாரணங்கள் வேண்டுவதில்லை.

நமக்கும் உதயகாலம் வரும் என்ற சொப்பனமும் காணாது வாழ்ந்துவந்த பலநாடுகளும் பலஜாதியினரும் எதிர்பார்க்காத விதம் உதயகாலத்தை நினைந்தும், எதிர் பார்த்தும், அடைந்தும் வருவதை நாம் அனுபவிக்கிறோமன்றோ?

எந்த நாட்டில் உதயகாலஞானம் உண்டாய்விட்டதோ அந்நாடு வெகுசீக்கிரம் உதயகாலத்தைப் பார்க்கவே போய்க்கொண்டிருக்கிறதென்ற உண்மையைத் தற்போது நமது பாரதநாடு நமக்குக் காட்டுவதைக்கண்டு நாம் அடங்கா மகிழ்ச்சியை அடைந்து வருகிறோம். ஆனால் நமது நம்பிக்கையைப் பலப்படுத்தும் உதவிகள் அடிக்கடி தோன்றி மறைவதைக்கண்டு நாம் மனந்தளரவே கூடாது. ஏனெனில் நாம் எதிர்பார்க்கும் உதயகாலம் வராமல் நின்றுவிடும் சுபாவமுடையதன்று. அவ்வெண்ணத்தை நமக்குள் தட்டியெழுப்பும் உபகரணங்களை மட்டும் நாம் வளர்த்துவரல் வேண்டும். இதுவே ஒவ்வொரு இந்தியனுடைய கடமையாகும். நமது விவேகம், கலைத்திறம், ஊக்கம் முதலிய சகல கருவிகளையும் இதற்கே நாம் உபயோகித்துவரப் பழகவேண்டும். இவ்வாறு நாம் செய்வோமானால் நமது உதய காலத்தின் வருகை மிகச் சமீபிக்கும் என்பது திண்ணம். ஆகவே இவ்வுபகரணங்களில் சிலவற்றை இங்கு அவசியம் ஆராய்வோமாக.

ஜனசமூகத்தைத் தட்டி யெழுப்பும் சாதனங்கள் எவையோ அவையே இவ்வுபகாரணங்களாகும். அவை முறையே எமது புத்திக்கெட்டியபடி நான்குதான். அவை:— பொதுக்கல்வி, தேகாப்பியாசம், பத்திரிகைப்பெருக்கு, சபைகளும் சொற்பொழிவுகளும். இந்நான்கையும் ஒரே மொத்தமாக நாம் எழுப்பினால் ஜனசமூகமே எழும்பிவிடும். பின் எக்காரியத்தையும் நாம் சாதித்து முடித்துவிடலாம். ஆனால் இந்நான்கு முறைகளும் ஒரேகாலத்தில் வெவ்வேறு தலைமைகளின் கீழ் தொடர்ச்சியாக நடந்தேறிவரல் மிகவும் அவசியமாகும். இந்நிலை நமது நாட்டில் இப்பொழுதே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. வெகு வேகமாக வளர்ந்தும் வருவதை நாம் பார்க்கிறோம். நமது இந்திய தேசாபிமானிகள் இந்நிலையில் ஒரு முக்கிய விஷயத்தில் கவனமாக இருந்து வரல் வேண்டும். அஃது யாதெனில் மேற்கூறிய நிலைகளை நடத்தும் தலைவர்கள் நன்கு கற்றவர்களாகவும் பிரிவினையற்ற தேசாபிமானிகளாகவும் இருத்தல்வேண்டும். இது மிகவும் அவசியமாகும். இன்றேல் உதய காலத்தின் வரவு தாமதப்பட்டுவிடும்.

உதய காலம் ஜனசமூகத்தினிடத்தில் வேறொன்றும் கேட்கவில்லை. தக்க தலைவர்களையே கேட்கிறது. அத்தலைவர்களே உதய காலத்தை வரவேற்கத் தகுதியுடையவர்களாவார்கள். அவர்களையே உதயகாலம் அடையவிரும்புகிறது.

தற்போது நமது நாட்டின் நிலை மிகவும் கவலைக்கிடமானதாக இருப்பதை நேயர்கள் கவனித்தல் வேண்டும், எவ்வித சாமர்த்தியமுள்ள தலைவனும் பொது ஜனங்களின் அறிவின்மையால் புறக்கணிக்கப்பட்டுவருவதை மிகவும் துக்கத்துடன் கிரகிக்கவேண்டியிருக்கிறது. என்செய்வோம், நமதுநாட்டின் துரதிர்ஷ்டமேயாகும்.

உதாரணமாக மஹாத்மா காந்தியின் தலைமையை நம் நாட்டின் தவப்பயனாக நாம் அடைந்தோம். உலகத்தின் வேறெந்த நாட்டிற்கும் கிடைப்பதற்கரியதாகும் அம்மகானின் தலைமையை நம்மவர்கள் அறிவீனத்தாலும் பொறுமையாலும் நீக்கி யெறிந்து கொண்டனர். தற்போது சேனாதிபதியற்றுத் தவித்துநிற்கிறோம்.

நாம் எதிர்பார்க்கும் உதயகாலமானது சிறந்த தலைவர்களையே வேண்டுகிறது. இவர்களின் கைவசமே தங்கவிரும்புகிறது. ஆகவே இனியும், இந்தகைய தலைவர்களை நாம் கண்டு அன்னாரின்

தலைமையின்கீழ் உதயதேவியை எதிர்கொண்டழைக்கத் தயாராதல்வேண்டும்.

இத்தகைய நற்றலைவர்களின்கீழ் நடத்தப்படும் நமது நான்கு துணைச் சாதனங்களும் நமக்கு நன்கு துணைபுரியும். அத்துணையால் உதயகாலம் வேகப்படும். நமது சதுர்வித உபகரணங்களில் உதய கால மாதாவுக்கு மிக முக்கியமானது பத்திரிகைகளாகும். அப்பத்திரிகைகள் தகுந்த விவேகிகளால் நடத்தப்படவேண்டியது மிகவும் இன்றியமையாததாகவிருப்பதால் நமதுகவனம் தலைவர்கள்மீது மட்டுமல்ல அக்கருவிகளின் மீதும் இருத்தல் தகுதியாகும். உதாரணமாக நமது "பாரத்துவாஜ" ஆசிரமத்தில் நடத்தப்பட்டுவந்த பாலபாரதியும் அதன் ஆசிரியர் மஹரிஷி வ. வெ. ஸுப்பிரமணியரும் எவ்வளவு தகுதியைப் பூர்த்திசெய்ததாக இருந்தது. அம்மாசிகை போன்ற பத்திரிகையும் அம்மஹரிஷி போன்ற ஆசிரியரும் பெறுதற்கரிய பாக்கியங்களன்றோ! இத்தகைய கருவிகளையே உதய காலமாகிய மாதா விரும்பி நிற்கிறாள்.

அதே கொள்கையையும் அதே விவேகத்தையும் தனதாகக் கொண்டு உதய காலத்தையே தனது நாமகரணமாகத் தாங்கி வெளிவரும் நமது உதய பாரதியானது தன் கொள்கைகளை நம் நாட்டின் தொண்டர்கள் பின்பற்றி நடக்க உதாரணமாகவிருக்கும் என்று நாம் பூர்த்தியாக நம்புகிறோம்.

"பாலபாரதி" நம் நாட்டிற்கு உஷட் காலத்தின் தோற்றத்தைக்காட்டியது போலவே அக்காலத்திற்கு அடுத்த பூரண சூரிய உதயகாலத்தைக்காட்டக் கடமைப்பட்ட உதய பாரதி தற்போது தோன்றவேண்டியது இன்றியமையாததாகும். ஆகவே இந்த நற்காலத்தை நமது தமிழர்கள் பின்பற்றி உதயகாலம் வெகுசீக்கிரம் வருமாறு தேசாபிமானத்தால் நடந்துகொள்வார்களென்று நம்புகிறோம். தமிழரும், தமிழ்நாடும்; பொதுவாக பாரத நாடு முழுவதும் எதிர்பார்த்துநிற்கும் உதயகாலம் வேறுஎங்கிருந்தும் வருவதில்லை. அம்மகா ஜனங்களின் அறிவின் இருப்பிடமாகிய மூளையிலிருந்தே உதிக்கவேண்டும். உதிக்குமாயின் அச்சீதேவி வரத்தயாராகவிருக்கிறாள். தேடித்திரியும்சுதந்தரம் நம்முன்வந்து நிற்பதில் ஐயமில்லை. உதயபாரதி வருக, உதயபாரதி வளர்க, உதயபாரதி வாழ்க.

ஒழிவு நேரம்.

(பாண்டியன் எழுதியது)

மனிதனுக்குத் தன் உணவுக்கும் உடைக்கும் பாடுபடக்கூடிய காலம் போக மிகுந்த நேரத்தை ஒழிவு நேரமென்று சொல்லப்படுகின்றது. உலகம்முழுதும் வேண்டிய உணவுக்கும் உடைக்கும் மட்டும் மெய்வருந்திப் பாடுபட்டால் மனிதருக்கு ஒருநாளில் பெரும்பாகம் ஒழிவு நேரமாய்விடும். மக்கள் விழித்திருக்கும் நேரத்தில் எந்தெந்தக் காரியங்களை எவ்வெப்பொழுது செய்து முடிக்க வேண்டுமென்பதைப்பற்றி முன்னாலேயே யாதொரு யோசனையும் செய்யாமல் சமயத்திற்கு மட்டும் அவசியப்பட்ட செயல்களைச் செய்து வருவதால்தான் எண்ணியவேலைகளும் முடியாமல் எடுத்த காரியமும் பூர்த்தியாகாமல் போய்விடுகின்றன. நம்மக்கள் கழிந்து கொண்டே போகும் காலத்தைப்பற்றிக் கவனிப்பதில்லை.

"அவகாசமில்லை", "போதிய நேரமில்லை" என்னும் கூக்குரல்கள் எங்குபார்த்தாலும் கேட்கப்படுகின்றன. ஆனால் உண்மை அப்படியில்லை. இப்பொழுது நாம் வாழ்கின்றபடியே யிருந்தாலும் எவ்வளவோ காலத்தை வீணாகக் கழிக்கிறோம். உபயோகப்படுத்தாமற் செலவாகும் நாழிகை எத்தனை? நாள்களெத்தனை? ஒருகாசு தவறிப்போய்விட்டால் அதுபோன்ற எத்தனையோகாசுகள் சம்பாதிக்கக்கூடிய நேரத்தை அதைத் தேடுவதில் செலவிடுகிறோம். ஆனால் பொருள் போய்விட்டால் பின்னால் தேடிக்கொள்ளலாம். நோயால் தேகம் இளைத்துவிட்டால் பின்னால் மருந்துண்டு பத்தியமிருந்து வலுவடைந்து விடலாம். கெட்டநடத்தையைக்கூடக் கட்டுப்பாடான வாழ்வினால் நேர்மையுடையதாய்ச் செய்யலாம். ஆனால் கழிந்துபோன நாழிகையும் நாளும் என்றும் திரும்பிவரப் போவதில்லை. இதனாலேயே நமது முன்னோர்கள் நல்ல கருமத்தை இன்றே செய்யவேண்டு மென்றும் இன்றும் இப்பொழுதே செய்யவேண்டுமென்றும் கூறியுள்ளார்கள். காலசக்கரம் சுழன்று கொண்டேயிருக்கின்றது. ஒளி, ஒலி பொன்றினுடையவேகமும் அதற்கிணையில்லை. சூரியன் உதிக்கிறான், மறைந்துவிடுகிறான். இவ்வாறாக நாட்கள் கழிந்துகொண்டே போகின்றன. ஒவ்வொருநாள்

காலையும் நமக்குப்புதிய ஒளிவந்து ஊக்கமளிக்கின்றது. இத்தகைய ஊக்கத்தையும் ஒளியையும் வீணாகக் கழிப்பது காலத்தை மட்டும் கழிப்பதல்ல, நம் தேகபலத்தையும் கழிப்பதாகும். வீணாகப்போன பொழுது அசைவற்றுச் சோம்பியிருக்கும் நமது வல்லமையையும் அழைத்துக்கொண்டு போகின்றது.

உலக சரித்திரத்தைப் பார்த்தால் மிகப் பெரிய காரியங்களெல்லாம் ஒழிவு நேரங்களில் செய்யப்பட்டிருக்கின்றன என்பது புலனாகின்றது. காலத்தை வீணாகக் கழித்த எவனும் பெரிய வீரனாகவாவது பண்டிதனாகவாவது இருந்ததில்லை. பெரியோரனைவரும் காலத்தைச்செலவழிப்பதில்மிகுந்த கருமிகளாயிருந்திருக்கிறார்கள்.

வங்காள மகாகவியாகிய ரவீந்திரநாத தாகூர் முன்காலத்தில் நன்றாய்த் தூங்குவதுகூடக் கிடையாதாம். நள்ளிரவில் திடீரென்று எழுந்திருந்து மேசையடியில் அமர்ந்து எழுத ஆரம்பித்துவிடுவாராம். அவர் தந்தையார் எவ்வளவு வேண்டியும் கேளாது காலையில் பொழுது விடிந்ததுகூடத் தெரியாமல் எழுதிக்கொண்டேயிருப்பார். இப்படியெழுதப்பட்ட நூல்கள்தாம் இக்காலையில் உலகத்தில் எங்கணும் போற்றிப் புகழப்படுகின்றன.

இங்கிலாந்தின் பிரதம மந்திரியாயிருந்த கிளாத்ஸ்தன் பிரபு தான் செல்லுமிடங்களுக்கெல்லாம் ஒரு சிறு புஸ்தகத்தையும் எடுத்துச்செல்வார். போகுமிடத்தில் கிடைக்கும் ஒழிவுகாலத்தை வீணாக்காது அப்புஸ்தகத்தை யெடுத்துப்படிப்பார். மந்திரிக்கு அவ்வளவு விலைமதிப்புள்ளதாயிருந்த காலம் நமக்குமட்டும் வீணாய்க்கழிக்க வேண்டிய தொன்றாகுமா?

நம்மில் படித்தவர்களும் கனவான்களும் கழிக்கக்கூடிய வீண் காலத்தை ஒரு கலைஞனிடமோ தொழிலாளியிடமோ சொற்பவிலைக்குக் கொடுத்துவிட்டால் அவர்கள் எத்தனையோ சித்திரம் எழுதிச் சிலைகள் சமைத்து மாளிகைகள் கட்டிவிடுவார்கள்.

நமது ராமாயணத்தைப்போல் ஆங்கிலேயர் பெரியதோர் காவியமெனக் கருதும் ஸ்வர்க்கநஷ்டம் என்ற புராணம் மில்தன் என்பவரால் எழுதப்பட்டது. அவர் உபாத்திமைத் தொழில் முதலிய பலவேலைகளுக் கிடையில் இதையும் எழுதியிருக்கிறார். இதுபோல இலையில் போயுட்கார்ந்து சாப்பாடு வருவதற்குள் எத்

தனையோ பேர்கள் பலபுஸ்தகங்கள் எழுதிவிடுகின்றனர். முன் நடந்தவை நடந்து விட்டன. நடக்கப்போவதும் நமக்குத்தெரியாது. இப்பொழுது கிடைத்திருக்கும்காலத்தை எப்படி நல்வழிப்படுத்துவதென்பதே நமது கவலையா யிருக்கவேண்டும்.

பலர் இலக்கியப் பயிற்சியில் உழைத்துத் தம் வாழ்நாளில் பெரும் பகுதியைச்செலவிடுகின்றனர். இலக்கியங்கற்பதிலும் நேரமெல்லாம் சுறுசுறுப்புடன் வேலை செய்தாலும் அனேக காலம் வீணாய்ப்போய்விடுகிறது. பல ஆண்டுகள் நூலாராய்ச்சி செய்தும் கடைசியில் தனக்கும் உலகத்திற்கும் விசேஷ பலனில்லாத மனிதனை நாம் பார்க்கின்றோம். இம்மாதிரி ஏற்படுவதற்குப் பலகாரணங்களுண்டு. இலக்கியக்கல்வியில் தேர்ச்சியடைய விரும்பும் உழைப்பாளிகள் கவனிக்கவேண்டிய விஷயங்களும் பலவுள.

ஒரு முழு நூலையும் படிப்பதைவிட, அதிலிருந்து எடுத்தெழுதப்பட்ட ஒருயர்ந்த பாகத்தைப்படித்து நாம் மகிழ்வடைகிறோம். சிறந்த படங்கள் எழுதிய கலைவல்லோனைவிட, அவன் எழுதியபடங்களைத் தேர்ந்தெடுத்து விற்கும் வியாபாரியை நாம் ஆதரித்துக் கேட்ட விலைகொடுத்துப் படங்களை வாங்குகின்றோம். நூலில் சில பாகங்களை நாம்விரும்புவது அவற்றின் சுருக்கத்திற்காகவும் இனிமைக்காகவுமே. ஆகையால் நூல்கள் விளக்கமாயும் சுருக்கமாயும் இருக்க வேண்டுவது மிகவும் அவசியமாகும். நூல்கள் எழுதுவோரும் படிப்போரும் இதை மனதில் வைத்துக்கொள்ளுவது மிகுந்த பயன் தரும்.

படிப்பது மிக எளிதான ஓர் காரியமென்று நினைத்துப் பல பாஷைகளையும் நூல்களையும் கற்றுவிட ஆவல்கொண்டு ஒன்றிலும் தேர்ந்த ஞானத்தை அடையாமல் பலர் வருந்துகின்றனர். வாங்கிய புஸ்தகங்களில் மடித்திருக்கும் இதழ்களைப் பிரித்து பார்ப்பதற்கில்லாமலே பலருடைய காலம் கழிந்து விடுகின்றது. ஆகையால் ஒருவன் கற்கவேண்டிய பாஷைகளையும் நூல்களையும் முதலில் நிர்ணயஞ் செய்து கொள்ளுவது நலம். பிறபாஷைகளைக் கற்றுத் தேர்ந்த ஞானம் பெறுவது கடினமான காரியம். எனினும் குறிப்பிட்ட சிலவற்றைக் கற்கவேண்டியது அவ்சியமாகின்றது. தன் சுயபாஷை கற்பதற்கும் தான் எழுதும் நூல்களில், உபயோகிப்

பதற்கும் எளிதாகவும் இருப்பதால் முதலில் தன் தாய்மொழியை நன்கு கற்றல்வேண்டும். வேற்று பாஷையில் எழுதப்பட்ட ஒரு பக்கத்தைப் படிப்பதற்குக்கூடக்கடினமாயும் அதிகநேரச்செலவாயுமிருக்கின்றது. தன் சொந்த மொழியிலுள்ள ஒரு பக்கத்தைப் பார்த்தவுடன் ஒருவன் சீக்கிரம் படித்துவிடுகிறான். தாய் மொழிப் பயிற்சியே மிகமுக்கியமாகும். அதற்குத் துணையாகச்சில வேற்று மொழிகள் கற்கவேண்டு மென்பதும் நமது நோக்கமாயிருக்க வேண்டும். இதுபோலவே கற்கவேண்டிய நூல்களையும் அதற்குச் செலவாகும் நேரத்தையும் கூடியமட்டும் முயற்சித்து நிர்ணயஞ் செய்துகொண்டாலொழிய நினைத்தகாரியம் முடிவெய்தாது. கற்பதில் நமக்குப் பேராசையிருந்தால் மாத்திரம் போதாது. நேரத்தைச்செலவழிப்பதிலும் செட்டாக இருக்கவேண்டும்.

நாம் மற்றவற்றிற் போல் இலக்கியத்திலும் செய்யும் வினையைத்திருந்தச்செய்து முடிக்கவேண்டும். படம்எழுதுபவன் தீட்ட வேண்டிய வர்ணத்தையும் உருவத்தின் அளவையும் கவனித்துச் செய்தால் ஒருவாறு அது முற்றுப்பெறுகின்றது. ஒருபாஷையில் வல்லவன் சரியான வார்த்தையைச் சரியானவிடத்தில் வைத்து அழகுற வாக்கியங்கள் அமைத்து விடுகிறான். அதுபோலத் தான் கற்று முடிக்கவேண்டிய விஷயங்களைத் தீர்மானித்துத் தொடங்குவோனுக்கு, படமெழுதுபவனுக்கு வண்ணமும்அளவும், பாஷையில் வல்லவனுக்குக் குறித்த சொல்லும் வைக்கவேண்டிய இடமும் போலவும், அவ்விஷயங்களின் முக்கியமான பாகங்களை முற்றும் கற்க வேண்டியது அவசியமாகும்.

படிக்கவேண்டிய ஒழுங்கையும் அளவையும் தீர்மானிப்பதால் மிகுந்தகாலம் வீணாகாமற் காத்துக்கொள்ள வழியேற்படுகின்றது. இத்துடன் ஒருவன் கற்கவேண்டி எடுத்துக்கொண்ட முக்கியமான விஷயத்திற்கு முரண்படாமலிருக்கும் பல கிளைவிஷயங்களையும் கற்றுக்கொள்ளலாம். ஆனால் எது கற்றாலும் முக்கியமாய்க் கற்கவேண்டியதற்குத் துணைபுரிவதா யிருக்கவேண்டும்.

கற்குங்காலத்தில் இடையில் எந்தவிஷயமும் குறுக்கிட்டுத் தடை செய்யாது பார்த்துக் கொள்ளவேண்டும். ஒருவியாபாரி சாமான் வாங்குபவர்கள் கேட்பதையெல்லாம் தடுமாற்ற மின்றிக் கொடுக்கும்படி ஏற்பாடு செய்கிறான்; கொடுக்கும் பணத்தையும்

விடாது பெற்றுக்கொள்ளுகிறான். எத்தனை பேர் எதைக்கேட்பினும் அவன் சலனப்படுவதில்லை. இருந்த இடத்திலேயே இருக்கிறான். சாமான் கொடுப்பதும் பணம்வாங்குவதும் ஒழுங்காக நடக்கின்றது. இதுபோலல்ல இலக்கியப் பயிற்சியின் நடுவில் ஏற்படும் இடையூறுகள். ராமாயணத்தில் விபீஷணன் அடைக்கலம் புகுந்தபோது சாம்பன் முதலிய பலரும் அவனை ஏற்றுக்கொள்ளக் கூடாதென்று இராமபிரானுக்கு எடுத்துச்சொன்னபின் அனுமன் தன் கருத்தை யெடுத்து மிகுந்த விநயத்துடன் சொல்லிவரும் பாகத்தைப் படித்துவரும் பொழுது இடையில் தடையேற்பட்டு விட்டால் பின்னர் மறுபடியும் சாம்பன் சொல்வதிலிருந்து ஆயர்ந்து படித்தாலொழிய அனுமன் அழகுற எடுத்துச்சொல்லும் கூற்றுக்களை நாம் அறிந்துகொள்ள முடியாது.

எந்தவிஷயத்திலும் நமக்கு ஆசை மட்டுமிருந்து பயனில்லை காலத்தைச் சிக்கனஞ் செய்யக் கற்றுக் கொள்வதே நமது முதற் கடமை.

க. நல்லவனோ தீயவனோ யாரிடமும் அன்பாயிரு; தீயவழியினின்று விலக்குவதே தீயவனுக்குச் செய்யும் அன்பாகும்.

மகமது நபி.

உ. கடவுளுக்கு பயந்து நட; நீ போகின்ற இடங்களிலெல்லாம் ஜனங்கள் கடவுள் சன்னிதானத்தில் இருப்பதாய் நினைப்பர்.

ஏமர்ஸன்.

ங. வயிறு புத்திமதி ஒன்றிற்கும் செவி சாய்ப்பதில்லை. அது கெஞ்சும், கூச்சலிடும். அது விடாமல் பிடித்துக்கொள்ளும் கடன் கொடுத்தவனை ஒக்கும். ஆனால் கொடுக்கக்கூடிய அளவு கொடுக்கவேண்டியதில்லை; கொடுக்கக் கடமைப்பட்டதைக் கொடுத்துவிட்டால் போதும், தொந்தரை செய்யாது.

ஸெனீக்கா.

ச. கடவுளை இருளில் உணரலாம்; ஆனால் ஒளியில் பார்க்கமுடியாது.

தாகூர்.

ரு. நாம் நகையாத நாளே வீணாய்க் கழித்த நாளாகும்.

ஷாம்பர்ட்.

மகாத்மா காந்தியின் மணிமொழிகள்.

திருவாளர். பொ. திருகூடசுந்தரம்பிள்ளை, எம். ஏ., பி. எல்.,
மொழி பெயர்த்தது.

நான் புதிய உண்மைகள் ஒன்றும் கூற வரவில்லை. எனக்குத் தெரிந்த உண்மையை உரைக்கவும், அதன்படி நடக்கவுமே நான் முயல்கின்றேன். பழைய உண்மைகள் பலவற்றிற்குப் புதிய பொருள் கூறுவதாக நான் சொல்லக்கூடும்.

௧. நாம் மனிதர் எவரையும் அஞ்சுவதை விடுத்து கடவுளின் உண்மையை மட்டுந் தேடுவோமானால், நாம் அனைவரும் தேவதூதர்கள் ஆகக்கூடுமென்று நான் நம்புகிறேன்.

௨. ஒவ்வொரு மனிதனுக்கும் கடவுள் தம்மைத் தினந்தோறும் வெளிப்படுத்துகிறார்; ஆனால் கடவுள் நம்மிருதயத்தில் பேசும் திருவாக்கிற்கு நாம் செவிசாய்க்காதிருக்கிறோம். இது என் உறுதியான நம்பிக்கை.

௩. வாழ்க்கை என்பது ஒரு மிகச் சிக்கலான விஷயம். உண்மையைப்பற்றியும், அஹிம்சையைப்பற்றியும், மனதால் ஆராய்ந்து செய்யக்கூடாத பல பிரச்னைகள் அநேக தடவைகளில் தோன்றுகின்றன. ஆனால் சத்தியத்தையும், அதை நிலை நாட்டுவதற்குள்ள ஒரே நீதிமார்க்கமாகிய சத்யாக்ரகத்தையும் விடா முயற்சியினாலும், அந்தரங்கப் பிரார்த்தனையினாலும் ஒருவன் கண்டடையக்கூடும்.

௪. உண்மையை அடையவிரும்புபவர்செல்லவேண்டியவழி சீக்கிரம் களைக்கச் செய்யக்கூடியதானாலும் அழகானதேயாகும். அப்பாதையைக் கண்டடைவதற்கான முயற்சிகளில் ஒன்றும் நான் குறைவு வைக்கவில்லை. அப்பாதையில் செல்லுவதில் விடா முயற்சியும் அந்தரங்கப் பிரார்த்தனையுமே எனக்கு உற்ற தோழர்கள்.

௫. பிற சமயங்களைவிட இந்து சமயத்தைப் பெரிதும் பாராட்டுகின்றேன். ஆனால் சமயம் என்பது இந்து சமயத்தைக் கடந்தது, மனிதவியல்பையே மாற்றுவது, உளத்துள்ள உண்மையுடன் பிரியாத விதத்தில் ஒன்று பிணிப்பது, மனத்தை என்றும் தூய்மைசெய்வது.

௬. சமயம் என்றால் என்ன? சாஸ்திரங்கள் அனைத்தையும் கற்பதால் அடையக்கூடியதன்று. மூளை கிரகிப்பது அன்று சமயம்; இருதயம் கிரகிப்பதேயாகும். அது நமக்கு அன்னியமான வஸ்துவன்று, ஆனால் அது நம்முள்ளிருந்து வெளித்தோற்றுவிக்கவேண்டியதொன்றேயாகும். அது என்றும் நம்மகத்திடையே விளங்கிக்கொண்டிருக்கின்றது; சிலர் அதை அறிவர்; மற்றவர் அறியார்.

ஆனால் அது அங்கே இருக்கின்றது. நம்மிடமுள்ள இச்சமய உணர்ச்சியை நாம் வெளி உதவியைக்கொண்டும் எழுப்பலாம், சொந்த முயற்சியைக்கொண்டும் எழுப்பலாம். எதைக்கொண்டு எழுப்பினாலும் சரி, நாம் எதையும் ஒழுங்காகவும், நிலைபெறவும் செய்ய விரும்பினால் அதை எழுப்பியேதீரவேண்டும்.

உண்மையான கடமையையேனும் சமயத்தையேனும் அறியாதவன் தேசபக்தியையும் அறியான்.

௭. நிருபணம் விரும்பாமலே ஒப்புக்கொள்ளவேண்டிய உண்மைகளாகச் சில விதிகளை நம் சமய நூல்கள் விதித்திருக்கின்றன. இவ்விதிகளின்படி வாழாதவன் சமயத்தின் இலட்சணத்தில் ஒருசிறிதும் அறிய முடியாதென்றும் அவை கூறுகின்றன. அவ்விதிகளில் ஐந்து "யமம்" எனக்கூறப்படும். அவையாவன:— உண்மை, கொல்லாமை (அஹிம்சை), பிரம்மசரியம், களவு செய்யாமை, உடைமை வைத்திராமை.

௮. சன்மார்க்கத்தில் ஒழுகுதல் என்பதற்கு சமய உணர்ச்சியை விருத்திசெய்தல் என்பது பொருள்.

சமயம் என்பது கோவிலுக்குப் போவதும், திக்கு நோக்கித் தொழுவதும் மட்டும் அன்று. தன்னையும் தன் தலைவனாகிய கடவுளையும் அறிவதே சமயமாகும்.

நெசவு தொழில் சம்மந்தமான விதிகளை அறியாதவன் நெசவுகாரன் ஆகான்.

அதுபோல் சிலவிதிகளின்படி நடவாதவன் தன்னை அறிய முடியாது. அவ்விதிகளில் சகலரும் சம்மதிக்கக்கூடிய முக்கிய விதிகள் மூன்று; அவையாவன: உண்மைவழி ஒழுகல்; உயிர்க்குறுகண் செய்யாமை; ஆசைகளை அடக்கியாளுதல்.

விநோதக் குறிப்புகள்.

இந்தியாவில் இப்பொழுது இழவும் கலியாணமும் சேர்ந்து நடப்பதாக ஒரு நண்பர் கூறினார். அதை விளக்கிச் சொல்லக் கேட்டதில் ஒரு பக்கம் அடிமைத்தனம் பிரேதப் பெட்டியில் அடைக்கப்பட்டு அடக்கம் செய்யப்படுகிற தென்றும் மற்றொரு பக்கம் கோடி சூரியப் பிரகாசத்துடன் விளங்கும் சுதந்திரம் என்னும் குழந்தை தொட்டிலில் வைக்கப்பட்டுத் தாலாட்டப் படுகின்றதென்றும் சொன்னார்.

* * *

சீமை யென்று வழங்கும் லண்டன்மாநகரம் மற்ற எல்லா நகரங்களைப் பார்க்கிலும் ஜனத்தொகையையும் செல்வத்தையும் உடையது. இதன் பரப்பு 122 சதுரமைல். சுற்றுமுற்றும் எங்கு பார்த்தாலும் இருப்புப்பாதைகள் வலைப்பின்னலைப் போல் இருக்கும். புகைவண்டி கீழிருந்து 40 அடி உயரத்தின் மேல் ஓடிக்கொண்டிருக்கும்.

இத்தகைய பெரிய பட்டணத்தைப்பற்றி ஷெல்லி என்ற ஒரு ஆங்கிலக்கவி, “நரகம் என்பது அநேகமாய் லண்டன் நகரைப் போலிருக்கும்” என்று சொல்லுகிறார்.

* * *

முதல் முதலாகப் புகையிலையை இங்கிலாந்திற்குக் கொண்டு போனது ஸர் வால்தர் ராலே யென்பவர். இவர் கப்பலில் சுருட்டு பிடித்துக் கொண்டிருக்கையில் இவர் வேலையாளொருவர் முதலாளிமேல் தீப்பிடித்து விட்டது என்று நினைத்து ஒரு வாளியில் தண்ணீரை யெடுத்து அவர் தலைமேல் கொட்டினான். அவர் கோபித்து எழுந்தபொழுது அவன் தன் தவறான எண்ணத்தை வெளியிட்டு மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். இக்காலத்தில் முதலாளி மேல் உண்மையாகவே தீப்பிடித்தாலும் வேலைக்காரர் வேண்டிய உதவி செய்யாதிருந்துவிடக்கூடும்.

* * *

இந்தியர்கள் இரவு முழுதும் விழித்திருந்து நாடகம் பார்க்கிறார்கள். இவர்கள் நாடகம் பார்க்கப் போகும் நேரம் 9 மணி. இதேநேரத்தில் ஆங்கிலேயர் நாடகம் பார்த்துவிட்டு வீடு திரும்புகிறார்களென்று ரெவரண்டு பேங்நேட் துரை சொல்லுகிறார்.

செஞ்சொற் சதங்கை.

திருவாளர். ஆர். பி. சேதுப்பிள்ளை பி. ஏ., பி. எல்., எழுதியது.

இவ்வுலகில் வழங்கும் மொழிகள் தனிமொழி யென்றும், கிளைமொழி யென்றும் இருவகைப்படும். இவற்றுள் தனிமொழி யானது மக்கள் தமது உளத்தில் ஊறிய கருத்துக்களை வெளிப்படுத்தும் பொருட்டு அமைத்து வழங்கும் சொற்களை தன்னகத்தே கொண்டு விளங்கும். ஆகலின், ஓர் தனிமொழியில் வழங்குஞ் சொற்களை நன்கு ஆராய்வோமானால் அம்மொழியைத் தாய்மொழியாகக்கொண்ட மக்களது மனப்பான்மை செம்மையாய் அறியப்படும். இம்முறையில் நம் தமிழ் மொழியில் வழங்கும் சில செஞ்சொற்களை ஈண்டு எடுத்து ஆராய்வாம்.

தமிழ் மொழியின் உண்மைத் தன்மையை உணராதார் சிலர் அதன்கண் அவசியமின்றிப் பல சொற்கள் அமைந்து கிடக்கின்றன வென்றும், அவற்றை வழக்காற்றினின்றும் அகற்றி, செந்தமிழ் மொழியைச் செம்மைப்படுத்த வேண்டுமென்றும் கருதுகின்றார்கள். ஒருமொழியில் ஒரு பொருளைக் குறிப்பதற்கு ஒரு சொல்லே போதியதாயிருப்ப பல சொற்கள் வழங்குவது தவறென்று அன்னார் கருதுகின்றார்கள். நமது தமிழ் மொழியில் ஒரு பொருள்குறிக்கும் பல சொற்களும் ஒரு பொருளின் பல நிலைமைகளைக் குறிக்கும் பல்சொற்களும் அமைந்திருக்கக் காண்கின்றோம். இதற்குச் சான்றாக பூ வென்னும் அழகிய சொல்லின் தன்மையை உற்று நோக்குவாம். அரும்பு, முகை, போது, மலர், அலர் ஆகிய ஐந்து சொற்களும் பூவின் பல பருவங்களை உணர்த்துகின்றன வென்பது தமிழ் நயமுணர்ந்தார் கண்டறிந்த உண்மையாகும். நறுமணங் கமழும் ஓர் நந்தன வனத்திற் செல்வானொருவன் அங்கு பல திறப்பட்ட பருவமமைந்த மலர்களைக்கண்டு மகிழ்வான். அப்பூக்களிற் சில அரும்பாகவும், சில முகையாகவும், சில போதாகவும், சில மலராகவும் இலங்கக் காண்பான். செடி கொடிகளில் அரும்பித் தோன்றி இலங்கும் முதற் பருவ நிலையே அரும்பு என்று 'அழைக்கப் பெறும். அரும்பே பூவின் முதற் பருவமென்பது.

"அரவின் வாயின் முள்ளெயி றேய்ப்ப அரும்பீன்று
குரவம் பாவை முருகமர் சோலைக் குற்றாலம்"

என்னும் ஞானசம்பந்தப்பெருமான் திருவாக்கால் நன்கு அறியப் படும். இத்தகைய 'அரும்பு' பொழுது செல்லச் செல்ல முதிரும் நிலையில் முகை என்று பெயர் பெறும். முகையெனினும் மொட்டு எனினும் பொருள் ஒன்றேயாம். இம்முகை அவிழும் பருவத்தில் போது என்று பெயர் பெறும். போது மலரும் நிலையில் மலர் என்று பெயர் பெறும். நன்றாக மலர்ந்த மலர் அலர் என்று பெயர் பெறும். ஆகவே ஒரு பூவின் முதற் பருவம் அரும்பென்றும், இரண்டாம் பருவம் முகை யென்றும், மூன்றாம் பருவம் போது என்றும், நான்காம் பருவம் மலர் என்றும், ஐந்தாம் பருவம் அலர் என்றும் வழங்கக் காண்கின்றோம்.

இந்த நயத்தை நமக்கு உணர்த்தக் கருதிய நாயனார்,

"காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்"

என்று காதல் மலரின் பருவங்களை அழகாக அமைத்துப் போந்தார். காலைப்பொழுதில் அரும்பித் தோன்றும் காதல் அரும்பெனப்பட்டது. அவ்வரும்பு பொழுது செல்லச் செல்ல முகையாகி முதிர்ந்து தளையவிழும் நிலையில் போதெனப்பட்டது. மாலைப் பொழுதில் அப்போது இதழ் விரிந்து மலர்தலால் மலரெனப்பட்டது. இத்தன்மையை சிலப்பதிகார ஆசிரியர் அந்திப் பொழுதின் அழகைக் கூறப்போந்த இடத்து,

"கூடினார் பால்நிழலாய் கூடார்பால் வெய்யதாய்
காவலன் வெண்குடைபோல் காட்டிற்றே-கூடிய
மாதவிக்குங் கண்ணகிக்கும் வானூர் மதிவிரிந்து
போதவிழ்க்குங் கங்குற் பொழுது"

என்னும் வெண்பாவின் ஈற்றடியில் விளங்க வைத்தார். வானத்தில் ஊர்ந்து செல்லுந் திங்கள் போதாய் நிற்கும் பூக்களை நெகிழ்த்து மலர்விக்குந் தன்மையை ஆசிரியர் அழகாக அமைத்திருப்பது போற்றுதற் குரியதாகும். இவ்வாறு ஒரு பொருளின் பல நிலைகளைக் குறிப்பதற்குப் பல சொற்கள் இன்றியமையாவென்பது சொல்லாமலே அமையும்.

இனி ஒரு பொருளை உணர்த்தும் பல சொற்கள் ஒருமொழியில் அமைந்திருப்பதன் அவசியத்தைச் சிறிது ஆராய்வாம். பாவகையிலேனும், உரைநடையிலேனும் ஓர் விழுமிய பொருளை உணர்த்தக் கருதும் அறிஞன் அப்பொருளை இனிய சொற்களால் எழிலுற அமைத்து அவ்வழகினைக் கண்டு மகிழ்கின்றான். இவ்வுண்மை பழந் தமிழ் நூலாய தொல்காப்பியத்தில் "இழுமென் மொழியால் விழுமியது மொழிதல்" என்று வியந்து கூறப்படும் கட்டுரையால் இனிது விளங்கும். அஃதாவது விழுமிய பொருளை விளங்க வுரைக்கக் கருதும் வினையினீங்கிய அறிஞன் அப்பொருளைச் செவிக்கின்பம் பயக்கும் செஞ்சொற்களால் அமைப்பான் என்பதே ஆசிரியர் கருத்தாகும். இவ்வாறு சொற்களை அமைப்பதால் வரு மின்பத்தைக் கம்பர் பெருமான், 'செஞ்சொற் கவியின்பம்' என்று அமைத்துப் போந்தார்.

"பொன்னின் சோதி போதினின் நாற்றம் பொலிவே போல்
தென்னுண்டேனிற் றீஞ்சுவை செஞ்சொற் கவியின்பம்"

என்னும் அழகிய சொற்கள் அளவிலா இன்பந் தருவனவாகும். இவ்வின்பம் பயப்பதற்கு இடம் தெரிந்து சொற்களை அமைத்தல் இன்றியமையாததாகும். செஞ்சொற்களால் கவிமாடம் அமைக்கும் அருஞ்செயலை மேற்கொண்ட அறிஞனுக்கு எல்லா இடங்களிலும் அமைத்தற்கேற்ற பல சொற்கள் ஒரு மொழியில் அமைந்திருந்தால் அல்லது பொருந்திய சொற்களைத் தேர்ந்தெடுத்தமைத்தல் இயலாததாகும். ஒரு மொழியில் ஒரு பொருளைக் குறிப்பதற்கு ஒரு சொல்லே அமைந்திருக்குமாயின் அச்சொல்லை ஆளும் முறையில் அது செவிக்கின்பம் பயவாது போதலும் கூடும். ஆனால் பலசொற்கள் ஒரு பொருளையே குறித்து நிற்குமாயின் இடத்திற் கேற்ற சொல்லை இனிதெடுத் தமைத்து கற்போரது சிந்தைக்குஞ் செவிக்கும் அளவிலா வின்பம் அளித்தல் இயலும். இத்தகைய சொல்லின்பம் தமிழ் நூல்களில் நிறைந் திருப்பதைச் செவிச்சுவையுடைய செல்வர்கள் நன்கறிவார்கள். இனி இத்தகைய செஞ்சொற்புலவன் செவ்விய நூல் செய்யுந் தன்மையைச் சிறிது ஆராய்வாம்.

இவ்வுலகில் அழகுறத் தோன்றும் பொருள்களை அறிஞர் பலவகையாகப் போற்றி மகிழ்வர். இயற்கைத் தோற்றத்தின்

இனிய அழகினை ஓவியப் புலவன் சித்திரத்தில் சிங்காரமாக அமைத்து மகிழ்வான். சிற்ப நூல்வல்லான் அவ்வழகினைச் சிலையில் எழிலுற அமைத்து இன்புறுவான். அவ்வாறே அவ்வழகினை ஓர் கவிஞன் செஞ்சொற்களில் அமைத்து மகிழ்வான். முன்னர்க் கூறிய ஓவியமும், சிற்பமும் கண்களைக் கவர்ந்து மனதிற்கு இன்ப மூட்டுகின்றன. ஆனால் கவியின்பம் செவியினைக் கவர்ந்து உளத்திற்கு உவகை ஊட்டுகின்றது. இவ்வுண்மையைச் சிறிது ஊன்றிச் சிந்திப்போமாயின் கவிஞனது செயல் நன்கு உணரப்படும். சிற்பநூல் வல்லானொருவன் முதலில் ஓர் மலையினின்றோ பாறையினின்றோ ஓர் கல்லைப் பெயர்த்தெடுக்கின்றான். அப்பால் அக்கல்லில் தான் அமைக்கக் கருதும் வடிவத்திற்கு வேண்டாத பாகங்களைப்பெயர்த்தெறிகின்றான். இவ்வாறு கல்லினின்றும் வடித்தெடுத்த உருவமே வடிவம் (Form) எனப்படும். அவ்வடிவம் அழகுற அமைந்திருக்குமேயாயின் அவ்வழகு வடிவு என்று வழங்கப்பெறும்.

ஆகவே ஒரு கல்லினின்றும் சிற்பநூல் வல்லானால் வடித்தெடுக்கப்பட்டு அழகுற இலங்கும் உருவமே வடிவு என்று பெயர் பெறும். இத்தன்மையே கவிஞனிடத்தும் அமைந்திருப்பதைக் காணலாம். கவிஞன் ஒரு மொழியினின்றும் செஞ்சொற்களை வடித்தெடுத்துப் படிப்போருள்ளத்தில் ஓர் வடிவை எழுதி அமைக்கின்றான். இத்தகைய செஞ்சொற்களை வடித்த சொற்களென்றும் முன்னோர் வழங்கினார்கள். வடித்த சொற்கள் எனவே வடியாச் சொற்களும் உள்ளன வென்பது சொல்லாமலே அமையும். உலக வழக்கில் வடித்தசோறு, வடித்த தங்கம், வடித்த எண்ணெய் என்று வழங்கக் காண்கின்றோம். இச்சொற்களை ஆராயும் பொழுது வடி என்னும் சொல்லின் உண்மைத் தன்மை நன்குணரப்படும். கஞ்சி முதலிய வேண்டாத பொருள்களோடு கலந்து நிற்கின்ற சோற்றை அவற்றினின்றும் பிரித்து வடித்தெடுப்பதே வடித்தல் என்பதின் பொருளாகும். அவ்வாறே மாசு மறுவோடு கலந்து நிற்கும் பொன்னைப் புடம் வைத்துப் பிரித்தெடுக்கும் செயலே வடித்தல் என்று சொல்லப்படும். அது போலவே கடுகு முதலிய மாசினின்றும் வடிகட்டி எடுக்கப்படும் எண்ணெய் வடி எண்ணெய் என்று வழங்கப்

பெறும். உலகவழக்கில் வடி என்னும் பதம் இவ்வாறு அமைந்திருப்பது போலவே நூல் வழக்கிலும் வடித்த நூலோர் என்றும், வடியாக் கிளவி யென்றும் வழங்கக் காண்கின்றோம். சிலப்பதிகாரத்தில் கோவலனுக்கு மாதவி எழுதிய திருமுகத்தில்,

“என் வடியாக்கிளவிமனம் கொளல் வேண்டும்”

என்றும் ஆசிரியர் அமைத்திருப்பது சிந்தித்தற் குரியதாகும். “வடியாக் கிளவி” என்னும் சொற்றொடருக்கு உரை யெழுதப் போந்த அடியார்க்கு நல்லார் ‘குற்றமறுத சொல்” என்று பொருள் கூறி யிருப்பதும் ஈண்டு கருதுதற் குரியதாகும். ஆகவே குற்றமற்ற சொல் வடித்த சொல்லென்றும், குற்றமறுத சொல் வடியாச் சொல்லென்றும் அடியார்க்கு நல்லார் கருதுவதாகத் தெரிகின்றது. இத்தகைய வடித்த சொற்களே செஞ்சொற்களா மென்பதும், அச்செஞ்சொற்களாலாய சதங்கையே சீரிய இலக்கிய நூலா மென்பதும், செஞ்சொற் சதங்கையின் ஒலியே செவிக்கும் சிந்தைக்கும் அளவிலா இன்பம் பயப்பதா மென்பதும் இனிது உணரப்படும்.

சிகாகோ நகரம்.

உலகத்திய இரண்டாவது பெரியநகரம் அமெரிக்காவிலுள்ள நியூயார்க் என்னும் பட்டணம். இதன் விஸ்தீரணம் 327 சதுரமைல். இது லண்டனை விடப் பெரிய நகரம். இங்கு பூமிக்கு வெகு உயரத்தில் ரயில்கள் ஓடுகின்றன, பூமிக்குள் கீழே மின்சார வண்டிகள் ஓடுகின்றன. இங்கு நடக்கும் தொழில்கள் அனந்தம். தினமொன்றுக்கு இந்தப்பட்டணத்துத் தபாலாபீசுகளில் சராசரி ரூ 180, 000 வரவு வருகிறதாம். இங்கு 71 தபாலாபீசுகளும், 329 சிறு தபால் ஸ்தலங்களுமிருக்கின்றன. இன்னும் இங்கு 206 பாங்குகளும் உண்டியல் கடைகளும் இருக்கின்றனவாம். இங்குள்ள தொழிற்சாலைகள் 48, 000! முன்காலத்தில் இந்நகரத்தில் எட்டுமாடியுள்ள வீடுகள்தா மிருந்தனவாம். இப்பொழுது இவை யெல்லாம் சிறுவீடுகளாம். இப்பொழுது 230 அடி உயரத்தில், 18 முதல் 34 மாடிகளுள்ள வீடுகள் அவற்றிற்குப்பதிலாகத்தோன்றி யிருக்கின்றன. இங்குள்ள நாடகசாலைகள் 98, சர்வகலாசாலைகள் 4 மத்திய ஆரம்ப பள்ளிக்கூடங்கள் 512, மாணவர்கள் 568, 232.

மனுஷ்ய தர்மம்.

[இதாலி தேசத்து தேசாபிமானி மாஜினி எழுதியது.]

வாணிதாஸன் மொழி பெயர்த்தது.

நீங்கள் வாழ்ந்து வருகிறீர்கள். அதனால் வாழ்விற்குரிய தர்மமுமுண்டு. தர்மத்தைப்பற்றியிராத வாழ்க்கையே கிடையாது. பிரபஞ்சத்திலுள்ள தெதுவும குறித்த ஒழுங்கும், நிலைமைகளும் கூடியதாய், ஒரு நியதிக்குள் அடங்கினதாயிருக்கிறது. சேர்க்கையாம் நியதியே தாதுவர்க்கத்தை நிகழ்த்துகின்றது; வளர்ச்சியாம் நியதியே தாவர வர்க்கத்தை நடத்துகிறது. தாராகணங்களுக்கோ சலனமென்னும் நியதி.

பிரபஞ்ச சிருஷ்டியிலுள்ள மற்றப் பொருள்களெல்லாவற்றிலும் நீங்கள் எவ்வளவு உயர்வோ அதே மாதிரி உங்களுக்குரிய தர்மமானது அவற்றின் நியதிகளைவிட மேன்மையும் பெருமையுமுடையதாயிருக்கின்றது. நீங்கள் விர்த்தியாகிக்கொண்டு உங்கள் கடமையை நிறைவேற்றி வாழ்ந்து வருவதே உங்களது முதன்மையான ஒரே தர்மமாகும்.

கடவுள் உங்களுக்கு ஜன்மத்தை யளித்திருக்கிறார். அதனால் ஜீவிய தர்மத்தையும் கொடுத்திருக்கிறார். மனுஷ்ய வர்க்கத்திற்குத் தருமத்தை யளிப்பவர் அவர் ஒருவரே. நீங்கள் கீழ்ப்படியக்கடமைப்பட்டது அவரது நியாயப் பிரமாணமொன்றே. அவரது நியாயத்தை யனுசரித்து, அதை விளக்கி, அனுஷ்டித்துக் காட்டுகிற வகையில் தான் மனுஷ்ய சட்டத்துக்கு வலிமையும் நன்மையுமுண்டு. அதை மறுக்கவோ நிராகரிக்கவோ செய்கையில் தீயதாகின்றது; அப்பொழுது கீழ்ப்படியாது அவைகளை யொழிக்க வழிதேடுவதே உங்கள் சுதந்திரம் மாத்திரமல்ல, தர்மமாகவுமிருக்கிறது.

ஈசுவரனது நியாயப் பிரமாணத்தை நன்கு விவரித்து ஸமூக விஷயங்களில் அதைப் பின்பற்றுகிறவனெவனோ அவனே உங்கள் நியாயமான தலைவன். அவனையே நேசியுங்கள்; அவனையே பின்பற்றுங்கள். ஆனால் போலி வேஷமாயும், விரோதமாயுமில்லாது கடவுள் ஒருவரைத் தவிர உங்களுக்கு வேறு முழுமுதல் தலைவன்

இல்லை, இருக்கவும் முடியாது. வேறொருவரை அவ்விதம் ஒப்புக்கொள்வது கடவுளிடம் விசுவாசமற்றதாயும் விரோதமாயுமிருப்பதாகும்.

ஆகையினால், உங்கள் ஜீவிய தர்மத்தையும், தெய்வசட்டத்தையும் அறிவதனாலே சன்மார்க்கத்துக்கு அடிப்படையும், உங்கள் காரியம் கடமை இவற்றின் முறைமையும், உங்கள் பொறுப்பின் அளவும் உண்டாகின்றன. ஒருவனுடையவோ, பலருடையவோ கொடுமையால் உங்கள்மேல் சுமத்தப்படும் அநீதிச்சட்டங்களினின்று காக்கிறதும் அதுவே.

இதை யறிந்தாலொழிய மனிதனென்ற பெயருக்கும் மனித சுதந்திரத்திற்கும் உரிமை யுள்ளளவர்போல் நீங்கள் நடிக்கமுடியாது. சுதந்திர மெல்லாம் ஓர் தருமத்திலிருந்தே எழுகின்றன. அத்தகைய தர்ம விதியைக் கோராதிருக்கையில் நீங்கள் கொடுங்கோலராகவாவது அடிமைகளாகவாவது இருப்பீர்கள். வல்லமையிருந்தால் கொடுங்கோலராயும், பலவீனரானால் வலியவன்கீழ் அடிமைகளாயும் இருக்கலாமே யன்றி வேறில்லை.

மிருகங்கள், தாவரங்கள், தாதுவர்க்கங்கள் இவற்றின் நியதியிலிருந்து மனித சுபாவத்தை வேறுபடுத்தும் நியதியை உணர்ந்தறிவதே மனிதத் தன்மையாகும். உங்கள் செயல்களும் அதை யனுசரித்தே இருக்கவேண்டும். ஆனால் இந்த நியதியை நீங்கள் அறிவதெப்படி?

தர்மம் என்னும் பதத்தைப் பிரயோகித்தவரிடமெல்லாம் உலகத்தார் எப்பொழுதும் கேட்டுவந்திருப்பது இக் கேள்வியைத்தான். இதற்குக் கிடைத்திருக்கும் பதில்களும் இக்காலத்திற் கூடப் பலதிறப்பட்டன. சிலர் ஒரு நீதிசாஸ்திரத்தையோ, அல்லது புஸ்தகத்தையோ காட்டி இதில் சகல தர்மங்களும் அடங்கியுள்ளன வென்று சொல்லியிருக்கிறார்கள். வேறு சிலர் ஒவ்வொருவனும் தன் தன் மனச்சாக்ஷியை நோக்கிக் கேட்பானாயின் அதனிடம் நன்மை தீமையின் விபரத்தை யுணரக்கூடு மென்று சொல்லுகிறார்கள். இன்னும் சிலர், தனிப்பட்டவரின் தீர்மானத்தை நிராகரித்துவிட்டு ஜனஸமூக அபிப்பிராயத்தை வேண்டிக்கொண்டு ஸமூகம் ஒத்துக்கொள்ளும் கொள்கையே மெய்யான கொள்கையென்று கூறியிருக்கிறார்கள்.

இவர்கள் ஒவ்வொருவர் சொல்வதும் தப்பிதமே. மனித ஜாதியின் சரித்திரமானது தவறுதலில்லா நிரூபண விஷயங்களால் இப்பதில்களெல்லாம் பயனற்றவை யென்று நிதர்சனப்படுத்தியிருக்கிறது.

ஒரு புஸ்தகத்திலாவது, ஒருவன் வார்த்தையிலாவது தர்மசாஸ்திர முழுமையும் அடங்கினதென்றுவற்புறுத்துவோர், மனிதஜாதி நூற்றாண்டுகளாக நம்பி வழிபட்டபிறகு முன்னிலும் சிறந்துள்ளதைத் தேடிப் பாவச்செய்வதற்காகக் கழித்துத் தள்ளாத நீதிசாஸ்திரமே யில்லை யென்பதையும், முக்கியமாய் இக்காலத்தில் மனிதவர்க்கம் தான் கொண்டுசெல்லும் மார்க்கத்தை மாற்றிவிடுமென்று நம்பும்படியான ஏது எதுவும் கிடையா தென்பதையும் மறந்துவிடுகிறார்கள்.

நியாயத்தையும் உண்மையையும் உணர்தற்கான சாதனம் அவனவனது மனச் சாக்ஷியே யென்று சாதிக்கிறவர்கள், எத்தனை பரிசுத்தமானாலும், தங்கள் மனச்சாக்ஷிக்காகப் பிராணத்தியாகம் பண்ணத் தயாராயிருக்கும் மதவிரோதிகளையும் மதக்கொள்கையிலிருந்து விலகினவரையும் பெற்றிராத மதமெதுவுமில்லை யென்பதை மாத்திரம் ஞாபகப்படுத்திக்கொள்வார்களாக. ரோமன் கதோலிக் சபையினின்றும் விலகினவர்மதமோ இக்காலத்தில் பல பிரிவுகளும் உட்பிரிவுகளுமாக ஆயிரம் பிளவுபட்டிருக்கின்றது. அவையெல்லாம் அவனவன் மனச்சாக்ஷி யென்னும் கொள்கையின் சுதந்திரத்தைச் சார்ந்தவை; எல்லாம் தற்காலம் ஐரோப்பிய ஜனங்களை வருத்திக்கொண்டிருக்கும் ஜனஸமூக, ராஜாங்கக் குழப்பங்களுக்குத் தனிக்காரணமான மதக் குழப்பத்தை, நீடிப்பித்துக்கொண்டிருக்கின்றன. மற்றொரு பக்கத்திலோ வென்றால், தனிப்பட்டவன் மனச்சாக்ஷியை மறுத்து மனித ஸமூகத்தின் பொதுவான கொள்கையில் மாத்திரம் குறியாயுள்ளவர், மனித ஜாதியின் விர்த்திக்கு அனுகுணமான சிறந்த எண்ணங்களெல்லாம் ஜனஸமூகம் ஒப்புக்கொண்ட பொதுவான கொள்கைகளுக்கு விரோதமாயிருந்ததனால் உண்டானவை யென்றும்; ஜனஸமூகம் இகழ்ந்து, துன்புறுத்தி, வதைசெய்த தேவர்களையோ அவர்கள் தாம் அந்த எண்ணங்களை யுபதேசித்தார்களென்றும் ஞாபகப்படுத்திக்கொள்ளுவார்களாக. ஆதலால் தெய்வ தர்மத்தை, உண்மையறியும்

நியாயப்பிரமாணத்தைத் தெரிந்துகொள்ள இந்த விதிகளில் எதுவும் போதுமானதாயில்லை.

இருந்தாலும் அவனவன் மனச்சாக்ஷியும் பரிசுத்தமானதுதான்; ஜனஸமூகத்தின் பொது அபிப்பிராயமும் பரிசுத்தமானதுதான்; இவ்விரண்டில் எதிலிருந்தேனும் கேட்டறிய மனமில்லாதவன் உண்மையறிதலில் முக்கியமாயுள்ள சாதனத்தை யிழந்தவனாகிறான். இவைகளிலொன்றை மாத்திரம் கொண்டே உண்மை தெளிய ஆவல் கொள்வதே இதுவரையிலும் பொதுவான தவறுதலா யிருந்திருக்கிறது. இந்தத் தவறுதலால் பிற்காலத்தில் சம்பவிக்கும் விஷயங்கள் கெடுதலாயும் நிச்சயமாமுயுள்ளன. ஏனென்றால் சுயமனச்சாக்ஷியானது குழப்பத்தில்விழாதபடி உண்மையைத் தீர்மானிப்பதா யிருக்கமுடியாது; மனித சுயேச்சையைக் கெடுத்து, கொடுங்கோன்மையை உண்டாக்கி எந்த நிமிஷத்திலும் ஜனஸமூகம் ஒப்புக்கொள்ளும்படியா யிருக்கமுடியாது. பொதுவாய்க் கருதப்படுவதைவிட இம் மூலாதாரங்களின்மேல் தான் ஜனஸமூகமென்னும் கட்டடம் நிற்கிறதென்பதைத் தெரிவிக்கவே இத்திருஷ்டாந்தங்களை எடுத்துக்காட்டுகிறேன். இவ்வாறாக ஜனங்கள் இதே தவறுதல் செய்து ஸமூகத்தை ஏற்படுத்துகிறார்கள். சிலர் தனிமனிதன் சுதந்திரத்தை மாத்திரம் போற்றுகிறார்கள். ஆனால் இதில் ஸமூக அபிவிர்த்தி புறக்கணிக்கப்படுகிறது. மற்றும் சிலர் ஸமூக சுதந்திரத்தை மாத்திரம் சார்ந்துகொண்டு தங்கள் ஸ்தாபனங்களை ஏற்படுத்திக் கொள்ளுகிறார்கள். ஆனால் இதிலோவென்றால் தனிப்பட்டவரின் சுயேச்சையான காரியமும் சுதந்திரமும் மறுக்கப்படுகின்றது.

பெரிய அரசியல் புரட்சி நடந்தபின் பிரஞ்சு தேசமும் முக்கியமாக இங்கிலாந்தும், முதலில் சொன்ன முறையானது பெரும்பான்மையோரின் சமவுணர்ச்சியின்மையிலும் கஷ்ட நிஷ்டூரத்திலும் முடிகிறதென்பதைத் தெரிவிக்கின்றன. பொது உடைமை வாழ்க்கையானது காரியத்தில் சித்தியாக்கப்படுமாயின், இரண்டாவது சொன்ன முறையானது (ஒருவனது) கருத்து முன்னேற்றமடைவதற்கான சந்தர்ப்பமெல்லாவற்றையும் ஒழித்து ஜனஸமூகத்தை அசைவற்றிருக்கச் செய்கிறதென்பதை நமக்கு அறிவுறுத்துகின்றது.

(தொடரும்)

மக்கள் வாழ்க்கையின் மூலம்.

ருஷிய ஞானி லியோ டால்ஸ்டாய் எழுதிய கதையை
திருவாளர். ல. ஆறுமுகம்பிள்ளை, பி. ஏ., பி. எல்.,
மொழிபெயர்த்தது.

குடியிருக்க வீடாவது நிலமாவது இல்லாத சிமியோனென்னும் செம்மானொருவன் ஒரு குடியானவன் குடிசையில் தன் மனைவி மக்களுடன் வசித்துவந்தான். கைத்தொழிலினாலேயே அவன் சீவனம் செய்துவந்தான். அக்காலத்தில் கூலி குறைவாகவும் உணவுப்பொருள் கிராக்கியாகவும் இருந்தன. அவனுக்கும் அவன் மனைவிக்கும் குளிர்காலத்தில் போட்டுக்கொள்ளத்தக்க ஆட்டுத் தோற்சட்டை ஒன்றுதானிருந்தது. அதுவும்கந்தலாய்ப் போய்விட்டது. இரண்டு வருஷ காலமாய் அவன் சட்டைக்குப் புதிய தோல் வாங்கவேண்டுமென்று எண்ணியிருந்தும் இதுவரை அது நிறைவேறவில்லை. சிமியோன், வீட்டிலிருந்த மூன்று ரூபாயையெடுத்துக்கொண்டு தனக்கு வரவேண்டியிருந்த பாக்கி ஐந்து ரூபாய் நாலணாவையும் கிராமத்தில் கடன்காரர்களிடம் வசூல் செய்து ஆட்டுத்தோல் வாங்கிவரவேண்டுமென்று தீர்மானித்து ஒரு நாட்காலையில் கிராமத்திற்குப் புறப்பட்டான் வழியில் ஒரு கம்பு வெட்டிக் கையில் வைத்துக்கொண்டு எப்படியாவது தோல்வாங்கித்தீரவேண்டுமென்று எண்ணிக்கொண்டே நடந்துசென்றான்

அவன் கிராமத்திற்குப்போய் நிலுவை வசூல் செய்ததில் ஒன்றும் கிடைக்கவில்லை. கடன்காரன் ஊரிலில்லை. பணம் பின்னால் கொடுக்கப்படும் என்று அவன் மனைவி சொல்லி யனுப்பிவிட்டாள். கடைசியாக ஒரு நாலணாமட்டும் அவனுக்குக்கிடைத்தது. இது அவன் முன் பழுதுபார்த்த ஒரு ஜதை செருப்பின் கூலிப்பாக்கி. இன்னும் பழுதுபார்த்துக்கொடுக்க இரண்டு கம்பளிச் செருப்பும் வாங்கி வைத்துக்கொண்டான். வியாபாரியிடம் கடனுக்குத் தோல் கேட்டதில் அவனை வியாபாரி நம்பவில்லை “நிலுவை வசூலின் கஷ்டம் எனக்குத் தெரியும்” என்று சொல்லி அவன் தோல் கொடுக்க மறுத்துவிட்டான். என்ன செய்வான் சிமியோன்! கையிலிருந்த நாலணாவுக்கும் குடித்துவிட்டு வீட்டிற்குத் திரும்பினான். வழியெல்லாம் உறைபனியின் கொடுமையினால் அவன் கஷ்டப்பட்டான். சட்டையில்லாமலே குடித்திருந்த மதுவின் வெறியால் அவன் கொஞ்சம் வெது வெதுப்படைந்தான். ஒருகையால் கம்பைப் பனிக்கட்டியின்மேல் ஊன்றிக்கொண்டும் ஒரு கையில் செருப்பை வைத்து வீசிக்கொண்டும் தனக்குள்ளே நடந்ததை யெல்லாம் பேசிக்கொண்டே வழிநடந்தான்.

அவன் குடித்த சாராயம் ரத்தக்குழாய்களில் ஓடி வேலைசெய்துகொண்டிருந்தது. பெண்சாதிக்குத் தோலைப்பற்றி யென்ன புகல் சொல்லுவது என்ற ஒரு கவலையைத் தவிர அவனுக்கு வேறு கவலையில்லை. பகல் முழுதும் வேலை செய்தாலும் கூலி கைக்கு வந்து சேர்ந்தபாடில்லை. வீடு, கால் நடையெல்லாம் வைத்திருந்தவர்கள் கொடுக்கவேண்டிய பணத்திற்கு' தன் உடம்பிலிருப்பதைத்தவிர வேறு விதியில்லாத சிமியோனிடம், „பணக் கஷ்டம்?” என்று சொல்லிவிட்டால் அவன் என்ன செய்வான்?

சிமியோன் வழி நடந்து ரஸ்தாவின்வளைவிலிருந்த ஓர் ஆலயத்தைச் சமீபித்தான். ஆலய வாயிலில் ஏதோ ஒரு வெண்மையான பொருளிருந்தது. அப்பொழுது அந்தி நேரம். அதற்குமுன் அவன் அங்கு வெள்ளைக்கல்லொன்றையும் பார்த்ததில்லை. சமீபத்திற்சென்று பார்த்ததில் ஒரு மனிதத்தலை தெரிந்தது. ஆலய வாசற்படியில் அந்த நேரத்தில் எந்த மனிதன் அங்கு வந்திருக்கக் கூடுமென்று அவனுக்குப் புலப்படவில்லை அங்கிருந்த மனிதன் உடல் அசையவில்லை. உயிருள்ளவனோ அற்றவனோ வென்பது தெரியவில்லை. உடம்பில் ஆடை யொன்றுமில்லை. “யாரோ ஒருவனைக்கொன்று ஆடையை உரிந்துகொண்டு இங்கே போட்டிருக்கிறார்கள். இதில் தலையிட்டால் நமக்கும் துன்பம் வரும்” என்று எண்ணி சிமியோன் திரும்பிப்போக ஆரம்பித்தான். அந்த உருவத்தைப் பாராமல் ஆலயத்தின் முன்பக்கமாகத் திரும்பினான். சற்றுதூரஞ்சென்று திரும்பிப் பார்த்ததில் அவ் வுருவம் அசையத் தொடங்கியதைக்கண்டு மிகவும் பயந்தான். தன்னையே அந்த உருவம் பார்ப்பதாகத் தெரிந்தது. அந்த உருவம் எங்கு எழுந்து தன்னைக் கொன்றுவிடுமோ வென்றும், நல்லவனாயிருந்தாலும் நிர்வாணியைக் கொண்டுபோய் என்ன செய்வதென்றும் யோசித்துப் பயப்பட்டான். இந்த தர்மசங்கடத்திலிருந்து வெளியேற்றத் தெய்வத்தை அவன் வேண்டினான். மேல் நடந்து போகலாமென்று நினைத்துச் சற்று தூரம்போகுமுன், அவன் மனச்சாட்சி நடக்கவொட்டாது அவனைக்கடிந்து தடுத்தது. அவன் ரஸ்தாவிலேயே நின்றுவிட்டான். “சிமியோனே நீ என்னசெய்தாய்? அந்த மனிதன் தரித்திரத்தினால் இறக்குந்தருவாயில் இருக்கக்கூடும். அவனை நழுவவிட்டு நீ பயந்து ஓடுகிறாய். நீ திருடர்களுக்குப் பயப்படும் படியான அத்துணை பணக்காரனாய்ப் போய்விட்டாயோ? சிமியோனே! உன்னைப் பழியன்றோ சாரும்!” என்று அவன் மனச்சாட்சி எடுத்துக்காட்டியது. அவன் உடனே திரும்பி ஆலயத்திலிருந்த நிர்வாணியிடம் போனான்.

சிமியோன் அருகில் சென்று பார்த்தபொழுது அந்த மனிதன் பாலியனாயும், உடம்பிற் காயமொன்றும் இல்லாமலும் தொழிலுக்கு ஏற்றவனாயும் இருப்பதைக்கண்டான். மிகவும் சமீபத்தில் போனதும் அந்தமனிதன் கண்ணை விழிப்பதாய்த் தோன்றியது. புதிய மனிதன் இலேசாக நிமிர்ந்து கண்ணை விழித்து சிமியோனைப் பார்த்தான். அப்பார்வை மிகவும் துக்ககரமாயிருந்தது. அந்தப் பார்வையிலேயே சிமியோன் மனம் இளகி அந்த நிர்வாண மனிதனிடம் பிரியம் வைக்கத் தொடங்கிவிட்டான். சிமியோன் கம்பளிச் செருப்பைக் கீழே வைத்துவிட்டுத் தன் துணிச்சட்டையையும் அரைக்கச்சையையும் கழற்றி அந்த மனிதனுக்கு அணிவித்தான். வேறு பேச்சில்லாமல் காரியத்தில் கண்ணாயிருந்துகொண்டு கம்பளிச்செருப்பையும் அவனுக்குப் பூட்டுவித்தான். புதியவனுக்குத் தானாகச்சட்டை போட்டுக்கொள்ளவும் செருப்பணிந்துகொள்ளவும் முடியாதபடி யிருந்தது. பின் கைகொடுத்து அவனைத்தூக்கி எழுப்பி நிறுத்தினான். எழுந்து நின்றதும் அம்மனிதன் நல்ல உறுப்பழகமைந்தவனாயும், முகம் நற்குணத்தைக்காட்டுவதாயும் தோன்றியது. சிமியோன் தன் குல்லாவையும் கழற்றிக் கொடுத்திருப்பான். ஆனால் அவன் வழுக்கைத்தலை குளிரைத்தாங்கவில்லை. மேலும் புதியவனுக்குத் தலைரோமம் நீண்டு அடர்ந்திருந்தது. இருவரும் புறப்பட்டார்கள். சிமியோனைத் தொடர்ந்தே புதியவனும் நடந்துபோனான்.

வழியில், "நீ எங்கிருப்பவன்?" என்று சிமியோன் கேட்டான்.

"நான் இப்பக்கத்தானல்ல."

"நானும் அப்படித்தான் எண்ணினேன். இந்தக் கோயில் பக்கம் நீயெப்படி வந்து சேர்ந்தாய்?"

"நான் சொல்லக்கூடாது."

"யாராவது உனக்குக் கொடுமை செய்திருப்பார்களா?"

"இல்லை, எனக்குத் தெய்வதண்டனை."

"கடவுள்தான் எல்லாவற்றையும் நடத்துகிறார். இருந்தாலும் உனக்கு எங்கே போகவேண்டும்?"

"எல்லாம் எனக்கு ஒன்றுதான்."

சிமியோன் திகைத்துப்போய் அந்த மனிதனும் அவன் பேச்சும் நற்குணத்தை வெளிப்படுத்தியபோதிலும், அவன் வரலாற்றை அறியமுடியாத

னால் வருத்தமடைந்தான். வழியில் காற்றடித்ததால் போதிய ஆடையின்மையால் சிமியோன் கஷ்டப்பட்டான். வீடு சமீபித்ததும் மனைவியின் ஞாபகம்வந்து வருத்தப்பட்டான். ஆனால் சோகத்துடன் தன்பக்கம் நடந்துவரும் அன்னியனைக்கண்டு ஆரங்கி சந்தோஷப்பட்டான்.

வீட்டில் சிமியோன் மனைவி கட்டை வெட்டி, தண்ணீர் எடுத்து குழந்தைகளை ஆகாரம் செய்வித்து நேரத்தோடு மற்ற வேலைகளையும் முடித்துவிட்டாள். புருஷன் வரவையும் ஆட்டுத்தோலையும்பற்றி யெண்ணிக்கொண்டு ஒரு பழைய சட்டையைத் தைக்க ஆரம்பித்தாள். சிமியோனுக்கு நிலுவை பிரிந்து, வியாபாரியிடம் அவன் ஏமாறாது நல்ல தோல் வாங்கி வரவேண்டுமே; இடையில் குடித்து வெறிகொண்டுவிடக்கூடாதே யென்றெல்லாம் கவலைப்பட்டுக் கையிலிருந்த வேலையைச் செய்வாளாயினள்.

இதற்குள் வாசல் நடையில் காலோசை கேட்டது. மாத்திரியாள் ஊசியைத் துணியில் குத்திவிட்டு வெளியே போய்க் கணவனுடன், வேறொருவன் தன் புருஷனுடைய சட்டை முதலானவற்றைப் போட்டுக்கொண்டு வந்திருப்பதைக் கண்டாள். வீட்டிற்குள் அவர்களைப் போகவிட்டு அவள் இருவரையும் மாறிமாறிப் பார்த்தாள். சிமியோனிடம் சாராயவாடை தெரிந்தது. கூடவந்திருப்பவனுடன் சேர்ந்துதான் தன் கணவன் குடித்திருப்பதாயும் புதியவன் கெட்டவனாய்த்தானிருக்கவேண்டுமென்று அவள் எண்ணமிட்டாள். எனெனில் புதியவன் உள்சட்டையன்னியில், பிறர் உடையை அணிந்து கொள்ளவேண்டிய நிலைமை நல்லவனாயிருந்தால் [illegible] வந்திராது என்பதும் அவள் கருத்து. விருந்தினனை ஓர் பலகையில் உட்காரவைத்துச் சிமியோன் ஏதாவது ஆகாரம் சமைத்து வைக்கப்பட்டிருக்கிறதா வென்று மனைவியிடம் கேட்டான். மாத்திரியாளுக்குக் கோபம் பொங்கியது. “நான் சமைத்து வைத்திருக்கிறேன். ஆனால் அது உங்களுக்கல்ல. நீர் உம்முடைய அறிவைக் குடித்துவிட்டதாகத் தோன்றுகிறது. சட்டைக்குத் தோல்வாங்கப்போய் இருந்த சட்டையையும் பறிகொடுத்துவிட்டு வீட்டுக்கு வந்திருக்கிறீர். கூட ஒரு அம்மணமான காலோடியையும் கூட்டி வந்திருக்கிறீர். இப்படிப்பட்ட குடிகாரருக்கு என்னிடம் உணவில்லை.” என்று அவள் சொல்லிவிட்டாள்.

“மாத்திரியாளே! வசைபோதும். காரணமின்றி உன்வாயைக் காட்டாதே. புதிதாய் வந்தவன் எப்படிப்பட்டவன் என்று முதலில் தெரிந்துகொள்ளு.”

“நீ பண்ணாத என்ன செய்தாய்?” (தொடரும்.)

லேயோனிதனின் சரிதை.

ஸ்ரீ. இராமானந்தம் எழுதியது.

ஐரோப்பாக் கண்டத்தில் கிரேஸ் என்றோர் தேசமிருக்கின்றது. அது மிகவும் செழிப்புள்ள நாடு. எங்கு பார்த்தாலும் பிரகிருதியின் அழகே திகழ்ந்து விளங்கும். அத்தகைய நாட்டின் அழகும், வளமும் அன்னியரை வசீகரிக்கின்ற காரணத்தினால், அது எல்லாக்காலத்திலும் யாராவது ஒரு அன்னிய ஜாதியினாலே தாக்கப்பட்டு வந்திருக்கிறது. அப்படித் தாக்கினவர்களில், பாரசீக சக்கிரவர்த்தியாகிய சேர்ஸஸ் என்பவன் ஒருவன். வெள்ளியும் பொன்னும் மற்றும் வாழ்விற்கு வேண்டிய சகல பொருள்களும், பாரசீக நாட்டில் இருந்தும் அம்மன்னன் கிரேக்க நாட்டின் மேலும் படையெடுக்கலானான். இப்படையெழுச்சியைப்பற்றிக் கூறுவாம்.

சேர்ஸஸ் படையெடுத்த காலத்தில் கிரேஸ் தேசமானது அனேக ராஷ்டிரங்களாகப் பிரிந்திருந்தது. ஒவ்வொரு ராஷ்டிரமும் தனித்தனி அரசனால் ஆளப்பட்டு வந்தது. அந்த ராஷ்டிரங்களில் ஒன்று ஸ்பார்டா என்பது. இங்குள்ளவர்களுக்கு ஸ்பார்த்தர் என்று பெயர். உலகத்திலேயே இந்த ஜாதியைப் போன்ற தேசாபிமானமும், ஆண்மையும், வேறு ஒரு ஜாதிக்கும் இருக்காது என்றே சொல்லலாம். இந்த ஜாதிக்குள் ஒரு வழக்கம் இருந்து வந்தது. பிறந்த குழந்தையை மலை உச்சியின்மேல் கொண்டுவிட்டு விடுவார்கள். மலையிலுள்ள குளிரோ தாங்க முடியாததாயிருக்கும். அக்குளிருக்கும் தப்பி அக்குழந்தை மூன்று நாள் உயிரோடிருந்தமானால், அதை நகரத்திற்குள் கொண்டுவந்து, “இக்குழந்தைதான் நமது ஜாதிக்கு எற்ற குழந்தை” என்பதாக அதை வைத்துக்கொள்ளுவார்கள். மலையின்மேல் விடப்பட்ட குழந்தைகளில் அனேகம் இறந்துபோகும். மூன்று நாளைக்குப் பிறகும் உயிருடன் இருக்கும் குழந்தைகளைத் தான் இவர்கள் எடுத்து வளர்ப்பார்கள். இக்காரணத்தினாலே தான் இந்த ஜாதியார் மிகவும் தீரர்களாயிருந்தார்கள். மேலும் நாம் ஸ்பார்த்தரின் சாமானிய வாழ்க்கை என்று கேள்விப்பட்டிருக்கிறோம். அதாவது ஸ்பார்த்த வாலிபர்கள் இயல்பான பிரகிருதி வாழ்க்கையை நடத்திவந்தார்கள்.

அவர்களுடைய வாழ்க்கையில் ஆடம்பரம், தமாஷ், இவைகள் ஒன்றுமே கிடையாது. இத்தீய குணங்களை விலக்கியிருக்கும் ஜாதியே எந்நாளும் ஸ்வதந்திரத்தை உடையதாக இருக்கும். இக்கெட்ட குணங்களைக் களைந்த காரணத்தினாலேயே, ஸ்பார்த்த ஜாதி ஸ்வதந்திரத்தைக் காப்பாற்றி வந்திருக்கிறது. ஸ்பார்த்த வாலிபர்கள் அநேக நாட்களுக்குப் பசியைத் தாங்குவதற்குப்பழகியிருந்தார்கள். அவர்கள் பெரும்பாலும் இயற்கை உணவையே புசித்து வந்தார்கள். இவர்கள் எத்தகைய பனியையும் லக்ஷியம் செய்யவில்லை. ஏனென்றால் பனி, உஷ்ணம், மழை, இவைகளுக்குப் பயந்த ஜாதி என்ன காரியம் செய்யமுடியும்? ஆடம்பரமின்மையும், இயற்கை வாழ்வும், கால நிலையைப்பற்றிய அலக்ஷியமும் தாம் ஸ்பார்த்தர்களின் ஸ்வதந்திரத்தைக் காப்பாற்றிவந்த முக்கிய குணங்கள் ஆவன.

ஸ்வதந்திரத்தைக் காப்பாற்றவேண்டும் என்ற எண்ணமுள்ள ஜாதிகள் ஒவ்வொன்றும், ஆடம்பரத்தை அடியோடு விட்டுவிடவேண்டும். நமது தாய் நாடாகிய இந்தியாவும் தனது ஸ்வதந்திரத்தை இழந்து இருப்பதற்கும் காரணம் நம்மிடம் இன்னும் இத்தீய குணம் இருப்பதுவே. இது ஒழிந்த பின்னர் தான் நமது ஜாதி ஸ்வதந்திரத்திற்கு ஏற்ற யோக்கியதையை வகிக்கும்.

ஸ்பார்த்த ஜாதி ஆண்மையுடன் மற்றக் குணங்களிலும் உயர்ந்திருந்ததால் அவர்கள் நாட்டில் ஸ்வதந்திரம் உலவிவந்தது. அவர்கள் பாலிய முதலேயே மல்லயுத்தம், வாள்வீச்சு, யானையேற்றம், வில்லெய்தல், இவைகளில் தேர்ச்சி பெற்று விளங்கினார்கள். யுத்தக் கல்வியிலும் இந்த ஜாதி மேம்பாடடைந்து விளங்கியது.

இந்த ஸ்பார்த்த ஜாதியை அக்காலத்தில் ஆண்டுவந்த அரசன் பெயர் லேயோனிதன். அவனுடைய சரீரத்தின் அழகு அளவிடற் பாலதன்று. அவனுடைய அகன்ற முகமும், புருவங்களும் பார்ப்போரை வசீகரஞ் செய்யாமலிரா. அவன் தன் குடிகளை ஓம்பி செங்கோல் செலுத்திவந்தான். இவனுடைய காலத்தில் தான் செர்ஸஸ் கிரேஸின் மேல் படையெடுத்து வந்தான். இச்சமாசாரம் கிரேஸுக்குஎட்டியவுடன் ஒவ்வொரு மாகாணத்தி

லும் யுத்த வீரர்கள் கைகளில் வில், வாள், வேல் முதலியவற்றைத் தாங்கி, கவசம் தரித்து, கேடயம் ஏந்தி யுத்த ஸன்னத்தரானார்கள். கிரேஸிலிருந்து மொத்தம் மூவாயிரம் யுத்த வீரர்கள் எதிரியைத் தாக்குவதற்குப் புறப்பட்டார்கள். இச் சைனியத்தின் தலைமையை வகித்தவன் நமது லேயோனிதனே.

எதிரியின் கட்சியிலோ லக்ஷக்கணக்கான ஜனங்கள் இருக்கிறார்கள். அவர்கள் உலகம் முழுவதையும் ஜெயிப்பதற்குப் போதுமானபடி எண்ணற்றவர் இருக்கின்றார்கள். இவ்வளவு சிறிய சைனியத்தை வைத்துக் கொண்டு கடல் போன்ற ஓர் படையை எப்படி எதிர்ப்பது? இருந்தாலும், தொகையைக் கண்டு மயங்காமல் தேசத்திற்காக யுத்தம் செய்யவேண்டும் என்ற ஒரே கருத்தோடு தான் இம் மூவாயிரவரும் யுத்தரங்கத்திற்குச் செல்லுகின்றார்கள்.

பாரசீக சைனியம் கிரேஸிற்குள் போவதற்கு, வழியேயிருந்த சில மலைத்தொடரைக் கடக்க வேண்டியிருந்தது. இத்தொடர்கள் கிரேஸின் எல்லையாயமைந்திருந்தன. கிரேக்கவீரர் இவற்றைக் கடந்து கொண்டு தம்மை நோக்கிவரும் எதிரியை நோக்கிச் சென்றார்கள். எதிரி சைனியமோ கடல் போலக் கோஷித்துக்கொண்டு வருகின்றது. அவர்களின் முன்னணி நெருக்கமாயும் பிளக்க முடியாததாயும் மதில் சுவர் போல வகுக்கப் பட்டிருந்தது. லேயோனிதனுக்கு முன் அணியைப் பிளந்து சென்று யுத்தம் செய்ய முடியாமலிருந்தது. அதனால், நாம் பின்னடைந்து சென்று எதிரியைத் தாக்குவோம், என்று லேயோனிதன் கட்டளையிட, நமது மூவாயிரவரும் வந்தவழியே திரும்பி கிரேஸின் எல்லையாகிய மலையை நெருங்கிவிட்டார்கள்.

அம் மலையில் ஒரே கணவாய்தான் உண்டு. மலையைக்கடந்து அப்பால் செல்வதற்கு இந்த ஒரே வழிதான் உண்டு. மலையின் மேல் ஏறி வருவதென்றாலோ மிகவும் சிரமமான காரியம். அக் கணவாயின் பெயர் தெர்மாபுலே. லேயோனிதன் கணவாயைக் கடந்து அதற்கு அருகாமையில் தனது சைனியத்தை நிறுத்திக் கொண்டான். கணவாய் வழியாக ஒரு சிறு கூட்டம்தான் வ

முடியும். அது அத்தனை சிறியது. எதிரியின் சைனியம் எவ்வளவு பெரிதாய் இருந்தாலும் லக்ஷியமில்லை. ஏனென்றால் சில பேர்களே கணவாயின் வழியாய் வர இயலும். அப்பொழுது கிரேக்கர் வெகு எளிதாய்த் தடுத்துவிடக்கூடும். இதையறிந்தே லேயோனிதன் கணவாயைத் தன் யுத்தகளமாக அமைத்துக்கொண்டான்.

எதிரியின் சைனியமோ நெருங்கி வந்து கொண்டிருந்தது. லேயோனிதன் தன் சைனியத்தைப் பார்த்து, "ஜனங்களே! நமது படை மிகவும் சிறிது எதிரியின் படையோ கணக்கில் அடங்காதது. ஆகையினால், நமக்கு எதிரியினால் மரணம் ஏற்படுவது திண்ணம். ஆனால் நாம் சண்டை போடுவது நமது ராஜ்யத்தின் ஸ்வதந்திரத்திற்காகவே. ஸ்வதந்திரந் தான் மரணத்தைவிட மேலானது. ஆகையினால் நாம் ஸ்வதந்திரத்தைக் காப்பாற்றுவதற்கு யுத்தஞ் செய்ய வந்திருக்கிறோம். யுத்தஞ் செய்வதில் மரணம் நிச்சயம் ஏற்படும். ஆகையினால், உங்களில் யாருக்கு மரணத்தைப்பற்றிய பயம் இருக்கின்றதோ அவர்கள் இந்தக்ஷணமே இச் சைனியத்தை விட்டு நீங்கி, ஊர் செல்லுங்கள்" என்று சொல்ல, இரண்டாயிரத்து எழுநூறு பேர் படையை நீங்கிச் சென்றார்கள். லேயோனிதன் சிறிதும் மனந் தளராது எஞ்சியிருந்த ௩00 சிபாய்களுடன் கணவாய்க் கருகாமையில் மறைந்து நின்றான். கணவாய்க்கு வெளிப்புரத்தில் சேர்ஸஸ் தனது சைனியத்தோடு கூடாரம் அடித்துத் தங்கினான்.

சேர்ஸஸ் வசத்தில் தேமராத்தன் என்ற ஸ்பார்த்த அடிமை ஒருவன் இருந்தான். அவனை இப்பொழுது கஜான்ஜியாக அவன் நியமித்துக் கொண்டான். எதிரிகள் கணவாயில் என்ன செய்கிறார்கள், எத்தனைபேர் இருக்கிறார்கள் என்பதைப் பார்த்துவர சேர்ஸஸ் ஒரு சிபாயை அனுப்பினான். அந்த சிபாயும் கணவாய்க்குப் போய், குதிரையை விட்டிறங்கி, எதிரிகளைத் தேடிப்பார்த்தான். மறைவிலிருந்த லேயோனிதன் முதலிய முன்னூற்றுவர்களைக் கண்டான். அவர்கள் தங்கள் ஆயுதங்களைத் தரையில் வைத்துவிட்டுத் தங்கள் தலைமயிரைக் கோது எடுத்துச் கொண்டிருந்தார்கள். சிபாய் திரும்பிப்போய் சேர்ஸஸிடம் தான் பார்த்ததைச் சொன்னான். சேர்ஸஸ் சிரித்துக்கொண்டு, சமீபத்தில் நேரிடப் போகும் கொடிய யுத்தத்தைக் கவனியாமல் தலையைக் கோது எடு

த்துக் கொள்வது வழக்கம்" என்றான்.

மறுநாட் காலையில்தான் யுத்தம் நடக்கப் போகிறது. லேயோனிதன் தன் சைனியத்தை நோக்கி, "வீரர்களே! நாம் இன்று கடைசி வேளையாகச் சாப்பிடுவோம்" என்று சொல்ல, எல்லோரும் சாப்பாட்டை முடித்துக் கொண்டு கவசம் தரித்து ஆயுதம் ஏந்தி எதிரியை எதிர்பார்த்த வண்ணமா யிருந்தார்கள். சேர்ஸஸ் தன்னுடைய சைனியங்களை நடத்திக் கொண்டு கணவாய்க் கருகாமையில் வந்து விட்டான். இருபக்கத்தாரும் வில், வாள், வேல் முதலிய பற்பல ஆயுதங் தாங்கி யுத்தஞ் செய்ய ஆரம்பித்தார்கள். இரண்டு சைனியத்திலும், முன் அணியில் காலாட் படையும், மத்திய அணியில் குதிரைப் படையும், பின்னணியில் யானைப் படையும் இருந்தன. சேர்ஸஸ் சைனியத்திலிருந்து கணவாயின் வழியாக எத்தனை பேர் போக முடியுமோ, அத்தனைபேர் கிரேக்க சைனியத்தை எதிர்த்து வந்தார்கள்.

லேயோனிதன் தனது வில்லால் சிலரை வீழ்த்தி விட்டான். ஸ்பார்த்த சிபாய்களும் வந்தவர்களில் மிஞ்சியவரை வீழ்த்தி விட்டனர். ஆக, மாண்டு வீழ்ந்தவர்கள் கணவாயைக் கொஞ்சம் அடைத்துக்கொண்டார்கள். இரண்டாவது தடவையாக சேர்ஸஸ் சேனையிலிருந்து சிலர் முன் போல லேயோனிதனை நோக்கிச் சென்றார்கள். கிரேக்க வீரர் அவர்களையும் முறியடித்து விட்டார்கள். லேயோனிதனுக்கு உடம்பில் பல காயங்கள் பட்டன. கிரேக்கரிலும் சிலர் மாண்டனர். இருந்தாலும் அதைரியப் படாமல் லேயோனிதன் தன் சைனியங்களை உத்ஸாகப் படுத்திக் கொண்டே, மிக மும்முரமாய் யுத்தம் செய்தான். எதிரியின் காலாட்படை பிணக் குவியலின் மேல் ஏறினது தான் தாமதம், கிரேக்க சைனியம் அவற்றை வீழ்த்திவிடும். இந்தப் பிணக்குவியலினால் நமது லேயோனிதனுக்கு யுத்தம் செய்வதற்குத் தகுந்த வசதி ஏற்பட்டது. இருந்தாலும், எதிரி சைனியத்திலுள்ள குதிரைப் படை வீரர்கள் பிணக்குவியலுக்கு உயரமுள்ள குதிரைகளின் மேல் இருக்கின்ற காரணத்தினால் அவர்கள் கிரேக்க சைனியத்தை நோக்கி குறிவைத்து அம்பு எய்வதற் கேற்ற வசதி ஏற்பட்டது. அப்படி விடப்பட்ட அம்புகளின் ஒன்று லேயோனிதனின்

ஒரு கண்ணைப் பிளந்து கொண்டு சென்றது. இருந்தாலும் லேயோனிதன் பின்னடையாமல் மேன் மேலும் யுத்தம் செய்து கொண்டே யிருந்தான். எந்த உத்ஸாகத்தோடும் வீரத்தோடும் கூட, பாஜிப் பிரபு மஹா ராஷ்டிர ராஜ்யத்தின் ஸ்வதந்திரத்திற்காக ராயக்காடு என்ற கணவாயில் யுத்தஞ் செய்தாரோ, எந்த உத்ஸாகத்தோடும் வீரத்தோடும் கூட ஒராஸியன் தீபர் நதியின் பாலத்தில் நின்று தார்க்குவின் அரசனைத் தனது ஸ்வதேசமாகிய ரோமா புரியின் ஸ்வதந்திரத்திற்காக எதிர்த்தானோ அதே உத்ஸாகத்தோடும் வீரத்தோடும் நமது லேயோனிதனும் யுத்தம் செய்து கொண்டிருந்தான்.

எனினும், கிரேக்க வீரரிலும் பலர் மடிந்து விட்டனர். ஸ்வதந்திரத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஆவலோடு போராடுகின்றவர்களுக்குக் கேவலம் ராஜ்ய ஆசையைப் பூர்த்தி செய்வதற்காகப் படையெடுத்துவரும் சைனியத்திலுள்ளவர்களைக் காட்டிலும் உத்ஸாகமும் ஆவேசமும் அதிகமாதலால், லேயோனிதனும் அவனுடைய வீரர்களும் எதிரிகளைவிடப் பன்மடங்கு உத்ஸாகத்துடன் சண்டை செய்தார்கள். பிணக்குவியல்கள் குவிந்து விட்டன. எதிரிகளில் அநேகர் மடிந்து விழ்ந்தனர். கிரேக்கரில் முப்பது பேர்களே மிஞ்சி நின்றார்கள். இருந்தாலும் லேயோனிதன் தேசத்திற்காக யுத்தம் செய்கிறோம் என்ற ஒரே ஆவேசத்தோடு தன் தோழர்களுக்கும் வீரம் ஊட்டிக் கொண்டு சமர் செய்தான்.

இதற்குள், தமது ஜன்ம பூமியாகிய கிரேஸுக்கு விரோதமாகச் சில ஜனங்கள் (துரோகிகள்) செர்ஸஸ் மன்னன் படைக்கு மலையைக் கடந்து வரும்படியான ரகசிய வழி யொன்றைக் காண்பித்து சத்துருக்களை அதன் வழியாக உட்புகச் செய்தார்கள். ஆக மலையின் மேல் ஏறி வந்த சத்துருக்கள் பின் பக்கத்தி லிருந்தும் லேயோனிதனைத் தாக்கினர். முன்னும் பின்னும் விரோதிகள்! பகையுடன் துரோகமும் சேர்ந்து கொடுமை புரிந்தது. என்றாலும், லேயோனிதன் ஸ்பார்த்தனல்லவா? அவன் இரத்தக் குழாய்களில் ஸ்பார்த்த இரத்த மல்லவா ஓடுகின்றது? அவன் எதற்கும் சலிக்கவில்லை. எதிரிகளில் பலரைக்கொன்று வீழ்த்திய வண்ணமாயிருந்தான். அவன் சகாக்களும் தலைவனைப் பின் பற்றியே ஒழுகி

வந்தார்கள். ஆனால் எவ்வளவு நேரத்திற்கு இப்படிப் போர் புரிய இயலும்? எதிரே அலை மேல் அலை மோதுவது போன்ற கடற் பெருஞ் சேனையுடன் ஜன்ம பூமிக்காகவும் தர்மத்திற்காகவும் போர் செய்து கொண்டே யிருக்க, இச் சிறு கூட்டத்தாரால் எப்படி முடியும்? இவ் வீரர்களுடைய ஆத்மா நிலை யில்லாத இந்த மண்ணுலகை விட்டு, வீரருக்கு உரிமையான விண்ணுலகிற்கு ஏகிற்று. எண்ணற்ற பெரும் படையின் முன்னர் எத்துணை வீரமிருந்தாலும் என்ன செய்யலாம்? ஆனால், தேசத் திருப்பணிக்கு விரதம் பூண்ட இவ் வீரர்களில் ஒருவரும் தோற்று உயிர் வாழவில்லை; ஒருவரும் பகை யஞ்சிப் புறங் காட்ட வில்லை; சகலரும் குறிப்பிட்ட தம் கடமையையும் இடத்தையும் விட்டு அகலாது உயிரை விட்டனர். தன் வீட்டை விட்டுப் புறப்பட்ட பொழுது தன் மனைவியைத் தழுவி, அவள் துக்கக் கண்ணீரைத் தன் விர வசனத்தால் ஆனந்தக் கண்ணீராக மாற்றி, கணவன் உயிரைவிட, அவன் மானத்தையும் புகழையுமே கருத வேண்டுமென்று உபதேசஞ் செய்து, விடை பெற்றுக் கொண்டு, தன் இளங் குழந்தைகளுக்கு முத்தங்கொடுத்து விட்டு, வழி யெங்கும் புஷ்பங்களாலும் பாமாலை களாலும் நாட்டு மக்கள் ஆசி கூற வழி நடந்து சென்ற கிரேக்க வீர சிங்கம்—லேயோனிதன் பகைவனின் அம்பால் கண்ணும் உடலும் பிளக்கப் பட்டு தன் மாத்ரு பூமியின் மேல் மடிந்து கிடக்கிறான்.

செர்ஸஸ் கணவாயில், வந்து லேயோனிதன் முதலான முன்னூற்றுவர்களின் பிரேதங்களை நல்ல பெட்டிகளில் வைத்துத் தன்னுடைய கையினாலேயே அடக்கஞ் செய்தான். பிற்பாடு தெமாரத்தனைக் கூப்பிட்டு, தற்போது நம்மை எதிர்த்தவர்கள் போன்று இன்னும் கிரேஸில் எத்தனை பேர்கள் இருக்கின்றனர், என்று செர்ஸஸ் கேட்க, இன்னும் ௮,000 பேர்கள் இருப்பதாய்த் தெரிவிக்கப் பட்டது. இதைக் கேட்டு மனந்தளர்ந்து இவ் வீரர்களை எதிர்ப்பதைக் கனவிலும் நினைக்கக் கூடாது என்று தனது மிஞ்சிய சைனியத்தைக் கொண்டு செர்ஸஸ் பாரசீகம் போய்ச் சேர்ந்தான்.

லேயோனிதன், பெயரும் புகழும் இன்றும் இருப்பதற்குக் காரணம் தன் ஜன்ம பூமிக்காக உடல், பொருள், ஆவி மூன்றையும், அவன் தத்தஞ் செய்ததால் தான். அவனது ஆத்மா எக்காலத்திலும் வீர சுவர்க்கத்தில் ஆட்சி செய்து கொண்டிருக்கும்.

* * *

கிராமவாழ்க்கை.

சில குறிப்புகள்.

இந்தியா என்று சொன்னால் அப்பெயர் இந்நாட்டிலுள்ள ஏழை லக்ஷம் கிராமங்களைக் குறிக்குமேயன்றி பம்பாய் முதலான பெரிய துறைமுகங்களையும் பட்டினங்களையும் குறிக்காது. பெரிய பட்டணங்களில்லாமலே நாம் உயிர்வாழ முடியும், முன்னேற்றமடையக்கூடும். மோட மாளிகைகள் இல்லாமலே இந்தியா தன் செல்வத்தையும், உரிமையையும் காப்பாற்றிக் கொள்ளமுடியும். ஆனால் இயற்கையழகு செறிந்து விளங்கும் கிராமங்கள் இல்லாமலும் குடிசைகள் இல்லாமலும் நம்நாடு மற்றைய நாடுகளுடன் சமஉரிமைபெற்று செழிப்புடன் விளங்கமுடியாது; சுருங்கச்சொல்லின் உயிர்வாழவே முடியாது.

* * *

குடிசையில் ஒரு குடும்பத்தார் வசிக்கின்றார்கள். பல குடிசைகள் சேர்ந்து ஒரு கிராமமாகின்றது. இதில் வசிப்பவர்கள் பந்துக்களாயும், ஒருவரையொருவர் நன்றாய்த் தெரிந்தவர்களாயும், சுக துக்கங்களைச் சேர்ந்து அனுபவிப்பவர்களாயும் இருக்கிறார்கள். பட்டணமோ பிரயாணிகள் தங்குகின்ற சத்திரத்திற்கு ஒப்பாக இருக்கின்றது. அங்கு பிழைக்கப் போனவர்கள்தாம் வாழ்கிறார்கள். ஒருவரை யொருவர் கவனிப்பதில்லை. எத்தனை குடும்பங்கள் வாழினும் அவை தனித்தனிக் கூட்டங்களாக விளங்குகின்றன.

* * *

ஆதலால் நம்நாடு முன்னேற்ற மடைய வேண்டுமானால் நமதுகிராமங்கள் செழிப்படைய வேண்டும், நாகரீகம் பெறவேண்டும், முன்னிருந்த உயர்ந்தநிலையை அடைய வேண்டும். பண்டைக்காலத்தில் ஒவ்வொரு கிராமமும் சீரும் சிறப்பும் பெற்றுத் தனித்தனி குடியரசாக விளங்கியது. கிராமத்தில் பற்றில்லாதவன் தேசத்தில் அன்பில்லாதவனாகின்றான். தன் கிராமத்திற்குப் பாடுபடாதவன் தேசத்திற்கு என்ன ஊழியம் செய்ய முடியும்? நமது பிற்காலத்திய வாழ்வெல்லாம் கிராமங்களைப் பொருத்தே இருக்கின்றது. கிராமங்களை மறந்த குற்றத்தினால்தான் நம் ஜனங்கள் உலகத்தில் வெவ்வேறு மூலைகளிலும் தீவுகளிலும், தோட்டங்களிலும், சுரங்கங்களிலும் கஷ்டப்படும்படி ஏற்பட்டுவிட்டது. நமது முதல் கடமை, ஆரம்ப வேலை கிராமத்தில்தான் இருக்கின்றது.

* * *

கிராமத்தார் சுகமாக நோயற்ற வாழ்வு வாழ்ந்தாலொழிய எந்த விதத்திலும் முன்னேற்றமடைய முடியாது. பெரிய பட்டணங்களின் சுகாதாரம் எவ்வளவு முக்கியமோ கிராமத்தின் சுகாதாரமும் அவ்வளவு முக்கியந்தான். ஒரு தனி உறுப்பு சீர்கெட்டு விட்டால் அங்கம் முழுமையுமே சீர்கெட்டு விடுகின்றது. நமது கிராமங்களில், நாம இதுவரை கண்டும் கேட்டறியாத வியாதிகளெல்லாம் பரவிவருகின்றன. பல வியாதிகள் பரம்பரைப் பாத்தியதையுடன் கிராமவாசிகளைக் கஷ்டப் படுத்துகின்றன. சிற்சில விடங்களில் ஜனங்கள் அளவுக்குமிஞ்சி வேலைசெய்தும், வெய்யிலில் காய்ந்தும், மழையில் நனைந்தும் கஷ்டப்படுகிறார்கள். பலர் சுகாதார முறையை நன்கறியாது கண்டதை யுண்டு கண்டபடி வாழ்க்கை நடத்துவதால் நோய்வாய்ப் படுகின்றனர். முக்கியமாக வியாதிகளில் அனேகம் கெட்ட உணவினாலும் அசுத்தமான நீரினாலுமே யேற்படுகின்றன. நம் மக்களில் ஒவ்வொருவருக்கும் சரீரத்தைப்பற்றியும், அதைக் காப்பாற்ற வேண்டிய முறைகளைப் பற்றியும், சுத்தமான வாழ்வைப்பற்றியும், தூய நினைப்புக்களைப்பற்றியும் நன்றாய்த் தெரிந்திருக்க வேண்டும். வீடுகளையும், தெருக்களையும், நீர் நிலையங்களையும் சுத்தமாக வைத்துக்கொள்ளத் தெரிய வேண்டும். வியாதிகள் வந்தால் குணப்படுத்தவும், வராமலே தடுக்கவும் வேண்டிய முறைகள் தெரிந்தவர்கள் கிராமங்களைப் பாதுகாக்க வேண்டும். ஆகாரம், பானம், காற்று ஆகிய இம்மூன்றையும் சுத்தமான நிலைமையில் பெறுவதற்குப் போதிய சாக்கிரதையுடனிருக்க கிராமத்தார்கள் பழக வேண்டும்.

பண்டைய நாளில் கல்போன்ற திண்ணிய சரீரத்துடனும், ஆரோக்யத்துடனும் வாழ்ந்துவந்த நாம் இப்பொழுது பற்பல அநாசாரங்களையும், துர்வழக்கங்களையும், ஆடம்பரத்தையும், குறுகிய நோக்கத்தையும், பொறுப்பற்ற தன்மையையும் கைக்கொண்டு உடல் வளங் குன்றி, அவயவ அழகு மறைந்து, நோயுற்று அறிவில் தாழ்ந்து இடர்ப்படுகின்றோம். இந்நிலை இன்னும் வெகுநாளைக்கு இருக்கக்கூடாது; சீக்கிரம் மாறினால் வாழ்ந்தோம், இல்லாவிடில் சாசுவத அடிமைகளாம் மடிந்து விடுவோம். ஆகவே முதற்கண் கிராமத்தார் உடல் பலம் பெருக வேண்டும், ஆரோக்யம் வளர வேண்டும், நோய்கள் மறைய வேண்டும்.

* * *

கிராமந்தோறும், முன்காலத்தில் ஒரு பள்ளிக்கூடம் இருந்திருக்கிறது.. கோயிலிலாவது, பள்ளிவாசலிலாவது ஒரு வித்யாசாலையோ, மத்ரஸாவோ நிலைபெற்றுக் கல்வியை விருத்திசெய்து வந்திருக்கிறது. உயர்தரக்கல்வி கற்பதற்குப் பெரிய கலாசாலைகளும் தோன்றி அழகுற நடை

பெற்று வந்திருக்கின்றன. அறிஞரும் ஒழுக்கத்திலுயர்ந்தவரும் பலர் கூடிக் கல்விச் சாலைகளைக் கனகக் கோயில்களென்றும், நாட்டின் பாது காப்பிற்கு உரிய கோட்டைகள் என்றும் கருதி நடத்தி வந்திருக்கிறார்கள் எந்தக் காரணங்களினால் இத்தகைய பள்ளிக்கூடங்களும் கலாசாலைகளும் அழிந்து விட்டாலும் கவலை யில்லை. இனியாவது இவற்றின் அவசியத்தைக் கருதி சுற்று முற்றும் எங்கணும் பள்ளிகளை ஸ்தாபித்து நடத்த வேண்டும். உலகத்திற் கெல்லாம் கல்வி நல்கிய இந்தியாவில் நூற்றுக்கு ஆறு பெயரே படித்தவர்களா யிருக்கின்றார்கள். எப்படியாவது இந்நிலைமை மாற வேண்டும். நம் சிறுவர்க ளெல்லாம், காலை யெழுந்தவுடன் படிப்பும் பின்பு கனிவு கொடுக்கும் நல்லபாட்டும் மாலைமுழுதும் விளையாட்டுமாகக் குமரக்கடவுள் போலும், நம்பிரான் கண்ணன் போலும் வளர வேண்டும்.

* * *

நம் கிராம வாசிகளிடத்தில் ஆடம்பரமும் சோம்பேரித்தனமும் வளர்ந்து கொண்டே வருகின்றன. தங்கள் நகர சகோதரர்களைக் கண்டு அவர்களும் தற்காலத்திய போலி நாகரீகத்தில் ஈடுபட்டு மெய்வருந்தி உழைப்பதை இழிவெனக் கருதும் காலமும் வந்துவிட்டது. பலர் கக்ஷிகளிலும், வியாச்சியங்களிலும் தங்கள் காலத்தையும் பொருளையும் வீணாகச் செலவு செய்கின்றனர். போதிய கைத்தொழில்க ளிருந்தால் அவர்கள் மேற் சொன்ன குறைகளிலிருந்து தப்புவதற்கு வழி யேற்படும். உலகத்தில் முன்னேற்ற மடைந்த நாடுகளில் எல்லாம் கைத்தொழில்கள், முக்கிய மாகக் குடிசைத் தொழில்கள் ஊக்கத்துடன் நடத்தப் பெறுகின்றன. ஜபான் முதலிய நாடுகளில் ஆண், பெண் குழந்தை யெவரையும் சோம்பி, வாடி, மூலையில் சுணங்கன் போல் உட்கார்ந்திருக்கப் பார்க்க முடியாது. நமது நாட்டிலே உழவர் போன்ற சில இனத்தவர் மட்டுமே சுறுசுறுப்புடன் வேலை செய்கின்றனர்.

இந்தியாவில் முக்கால் வாசி ஜனங்கள் நிலத்தை நம்பியே வாழ்கின்றார்கள். அவர்களுக்கு ஒழிவு நேரங்களில் செய்து முடிக்கச் சில கைத் தொழில்கள் அவசியம் இருக்கவேண்டும். நமது செல்வத்திற்கும் பெண் மணிகள் கற்பிற்கும் காப்பாக விளங்கிய நூல் நூற்றல் நெசவு முதலிய, தொழில்களை மறுபடி முன்னிருந்த நிலைமைக்குக் கொண்டுவரவேண்டு மென்பதைப் பலரும் ஒப்புக் கொள்கின்றனர்.

* * *

சன்மார்க்கத்தை விட்டு நமது நாடும், நகரமும் நாளுக்கு நாள் விலகிக் கொண்டே போகின்றன. உலகனைத்தையும் பெற்றிருந்தாலும் ஒருவன்

குணத்தை யிழந்துவிட்டால் அவன் பெற்ற பெருஞ்செல்வம் என்ன பயன் விளைக்கும்? ஒன்று மில்லை. நம்முடைய ஆசாரக் குறைவான பழக்க வழக்கங்கள் மாற வேண்டும். நீரால் அமையும் வெளித் தூய்மை மட்டு மன்றி சத்தியத்தால் அமையும் உள் தூய்மையும் நம்மிடை வளர வேண்டும். நம் கிராம வாசிகளிடையே தெய்வ மணம் வீச வேண்டும்; ஆஸ்திக புத்தி தழைக்க வேண்டும். அருள் பெருக வேண்டும். இதற்கு மிகுந்த உதவியாயிருந்த பஜனை கோஷ்டிகளும் மடங்களும் புனருத் தாரணம் செய்யப் பட வேண்டும். நமக்கு என்றும் உதவி புரிந்து வரும் சங்கீதம் பண்டைய நிலையை அடைந்து, எங்கு பார்த்தாலும் தேவதா கீர்த்தனைகளும் பஜனைகளும் நடை பெற வேண்டும்.

* * *

பெரும்பாலும் விவசாயிகளே வாழும் நமது கிராமங்கள் முன்னேற்றமடைவதற்கு விவசாயம் விருத்தியாக வேண்டும். விவசாயம் நமது முதுகெலும்பாகும். பண்டைய முறைகளையே பிடித்துக் கொண்டிராமல், அதிக நேரமும் பிரயாசையும் வீணாகாமலும் மிகுந்த பலனை அடைவதற்கும் எற்ற நவீன முறைகளையும் கற்றறிந்து, நாம் அனுஷ்டானத்திற்குக் கொண்டு வர வேண்டும்.

* * *

இவ்வாறாக நமது உயிர் நிலையாகிய கிராமத்தில் செய்ய வேண்டிய வேலைகள் பல நம்மை எதிர் பார்த்துக் காத்துக் கொண்டிருக் கின்றன. இதற்கு எராளமான பொருளும், மனிதரும் வேண்டும். நம் ஜனங்களோ மிகவும் எளியவர்கள். எதற்கெல்லாம் தான் அவர்கள் பொருள் உதவுவார்கள்? குழந்தை பிறந்தால் செலவு, வளர்ந்தால் செலவு, இறந்தால் செலவு! இவற்றிற்கெல்லாம் செலவு செய்ய வேண்டியது நமது கடமை. ஆனால் விசேஷ காலங்களில், கலியாணக் காலங்களில் நாம் வீணாகச்செய்யும் பல செலவுகளையும் குறைக்க வேண்டும். மனம் இருந்தால் பொருளை மிஞ்சச் செய்யலாம். நமக்கு இப்பொழுது தேவையா யிருப்பது முக்கியமாக வாலிபர்களே. இளமையும் ஊக்கமும் வாய்ந்து ஊழியம் செய்ய இளைஞர் பலர் முன் வந்து இப் பெருந் தொழிலை நிறைவேற்ற வேண்டும்.

* *

Kantimathi Mart.

Dealers in watches, jewellery etc.

TInnevelly Town.

Our Mart is a reliable house for Watches , 18 Ct Rolled gold jewellery etc.

Rolled gold, lever full jewelled, best lever watch with plain beautiful dial. Size 10 1/2 &9 Rs 35/ only

(Written guarantee for 3 years given in the K. Mart printed form.)

14 Ct pure gold, lever full jewelled watch *with beautiful dial.* *Size* 10½, 9, 8½, & 5½.
Rs 75; 85; 100; 125; 150; respectively.

(Guaranteed for 5&7 years for the above watches given in our printed form with the propritor T. Muthia Pillayan's signature.)

Pocket watches all lever—Rs 9, 7-8-0; 5; 4; & 3.

All our pocket watches working nicely and satisfactorily.

German American, French & Italian Timepieces.

From Rs 2-4-0; 2-8-0; 4- 0-0;4-8-[illegible];6-0-0; 7.0-0

German,& American Clocks 12" dial like Sethomos.

Rs 25. 18 to 50. 18

A trial will convince you that our goods are the most genuine.

Please mention Udaya Bharati when ordering.

Try once with

The Tinnevelly Cycle ma

Swamy Sannadhi. Tinnevelly.

for

High grade Wrist and pocket watches, Clocks and time-pieces, electrical novelties, **harmoniums, cycles and accessaries,** umbrellas, fountainpens, trunks and suitcases of steel, leather and letherette, fancy walking sticks, mirrors of all sizes, fancy toys, optical goods etc.

You will be convinced your bargain is very cheap and the quality also good.

Proprietor S. Rengiah chetty.

ஸ்ரீசுந்தரம் சாய நெசவு கம்பெனி லிமிட்டட்.

திருநெல்வேலி.

இந்தியமில் ௨௦ நம்பர் நூல் 54" அகலம் பலவிதக்கரை சலவை வேஷ்டி கஜம் 1க்கு	ரூ	0	8	0
ஷை 40" நம்பர்,, கஜம் 1க்கு	ரூ	0	9	0
நெட்டுவில் சலவை 4×7 கஜம் 34" அகலம் மடி 1க்கு	ரூ	2	8	0
ஷை ,, 4×6 கஜம் 34" அகலம் மடி 1க்கு	ரூ	2	4	0
ஷை ,, 4×8 கஜம் 36" அகலம் மடி 1க்கு	ரூ	3	0	0
36"×[illegible]2 கஜம் கெ[illegible]ச்சாய ஜமக்காளம் மடி 1க்கு	ரூ	3	0	0
28"×12 கஜம் ஷர்டிங் சலவை பீஸ் 1க்கு	ரூ	3	0	0

☞ கூட்ஸில் மட்டும் ரயில் சார்ஜன்னியில் சரக்குகள் அனுப்பக்கூடும். ரொக்கவிலை.

ற் தமிழபிமானி யிடமும் கீழ்க்கண்ட

சுங்கள் இருக்க வேண்டியது அத்யாவசியம்.

1. மனோன்மணீயம் (சிறந்த தமிழ் நாடகம்)	ரூ. 2 8 0
2. கம்பராமாயணம் (பாலகாண்டம்) கனக சுந்தரம்பிள்ளை பதிப்பு	ரூ. 2 0 0
3. ,, (சுந்தரகாண்டம்) வாணி விலாஸ்பதிப்பு	ரூ. 2 0 0
4. நந்திக் கலம்பகம் (விரைவில் வெளிவரும்)	
5. மேகமாலை (மேகங்களைப்பற்றியசந்ததரங்கம்) (விரைவில் வெளிவரும்)	
6. சைவ அநுஷ்டானவிதி (ஒவ்வொருசைவரிடமும் இருக்க வேண்டியது) விரைவில் வெளிவரும்.	
7. கிஷ்கிந்தா காண்ட உரை	ரூ. 4 8 0
8. சுந்தர காண்ட உரை	ரூ. 5 0 0
9. பிரதாப முதலியார் சரித்திரம்	ரூ. 1 2 0
10. பக்தவிஜயம் (உயர்ந்த பதிப்பு. அநேக பக்தர்களின் படங்களுடன்)	ரூ. 6 0 0
11. நாலடியார் உரை	ரூ. 2 0 0
12. திருக்குறள் உரை	ரூ. 4 0 0

புஸ்தகங்கள் கிடைக்கு மிடம்:—

[ஜனோபகாரி, லெக்ஷ்மி, கம[illegible]ஸமான், உதயபாரதி முதலிய பத்திரிகை களுக்குப் பிரதிநிதி.]

S. முத்தயபிள்ளை,
புஸ்தக வியாபாரம்,
திருநெல்வேலி ஜங்ஷன்.

rinted at the Gurukula Press; Sheramadevi
by P. Ramaswamy Ayengar, Sheramadevi.